# பிரஜைகளின் கலந்துரையாடலுக்கான முன்னுரை

மூல ஆசிரியர்:

**லயனல் குருகே**

தமிழாக்கம்:

**எஸ். சிவகுருநாதன்**

# பிரஜைகளின் கலந்துரையாடலுக்கான முன்னுரை


மூல ஆசிரியர்:

**லயனல் குருகே**

தமிழாக்கம்:

**எஸ். சிவகுருநாதன்**



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## பிரஜைகளின் கலந்துரையாடலுக்கான முன்னுரை

முதற் பதிப்பு : ஜனவரி 2014

ISBN - 978-955-4746-30-5

பக்க வடிவமைப்பு: **வாக்யா றூ** 011-2708377

முன் பக்க வடிவமைப்பு : **கே.டபிள்யூ. ஜனரஞ்சன** 077-7304121

அச்சாக்கம் : **க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ்** 011 2329739

வெளியீடு : **மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
(சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவு)
24/2, 28வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு -07
தொ.பே : 011-2370801-4 ஃபக்ஸ் : 011-2370802
ஈ-மேல் : cpa@cpalanka.org
வெப் : www.cpalanka.org

**உள்ளடக்கம்**

பிரஜைகளின் கலந்துரையாடலுக்கான முன்னுரை **5**

பிரஜை என்பவர் யார்? **7**

அரச சேவைகள் ஆணைக்குழு **33**

தேசிய பொலீஸ் ஆணைக்குழு **37**

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு **39**

ஒம்புட்ஸ்மன் **41**

பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் **45**

பிரதேசச் செயலகம் **51**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு **56**

கணக்காய்வுத் திணைக்களம் **58**

இலஞ்சம் மற்றும் ஊழல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு **60**

நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு **63**

தேர்தல் திணைக்களம் **65**

நுகர்வோர் சேவைகளுக்கான அதிகார சபை **77**

இலங்கையின் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு **79**

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு **81**

இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்திற்கான கருமபீடம் **83**

அரச கரும மொழிகள் ஆணைக்குழு **86**

இலங்கைப் பிரஜைகள் தமது மனக் குறைகளை சமர்ப்பிக்கக்கூடிய நிறுவனங்கள் **93**

## பிரஜைகளின் கலந்துரையாடலுக்கான முன்னுரை

இலங்கையில் பிரஜைகளின் கலந்துரையாடல் பலவீனமான மட்டத்திலேயே இருக்கிறது. இதன் விளைவாக அதிகாரம் படைத்தோர் சிறப்புரிமையற்றவர்களை ஒடுக்கு முறைக்கு ஆளாக்கும் போக்கே இன்று காணப்படுகிறது. பிரஜைகளின் கலந்துரையாடல் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்தும் அடிப்படை என அறிமுகப்படுத்த முடியும். இதற்குப் பிரஜைகளுக்கு விழிப்புணர்வும், அறிவும் இருக்க வேண்டும். இதன்பொருட்டு இருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

1. நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் தாபிப்பதற்கு தற்போது இருக்கும் கட்டமைப்புக்களை அடையாளம் காணுதல்.

2. மேற்படி கட்டமைப்புக்களின் சாதகமான அம்சங்களைப் போலவே மட்டுப்பாடுகளையும் அடையாளம் காணுதல்.

3. புதிய கட்டமைப்பைச் சிருஷ்டிப்பதற்கு ஊக்குவித்தல்.

இதன் பொருட்டு பிரஜைகளுக்கு உரிமை உண்டு என்பதை அவர்கள் அடையாளம் காண்பது முதற்படியாகும். ஆனால், அனேகமாக இத்தகைய செயற்பாடு சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது. இவற்றிற்குத் தடைகள் ஏற்படுகின்றன. பொய்யான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. நல்லாட்சியினை விரும்பாத சக்திகளே இவ்வாறாகச் செயற்படுகின்றன.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்பத்தில் இருந்தே ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் வலுவூட்டுவதற்காக பிரஜைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் நாம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளோம். ஆய்வுகளை மேற்கொண்டும், செயலமர்வுகளை நடத்தியும், கட்டுரைகளை வெளியிட்டும், பிரஜைகள் பற்றிய கலந்துரையாடலைத் தொடர்ச்சியாக நாம் நடத்தி வந்துள்ளோம்.

பிரஜைகளின் உரிமைகளையும் அவர்களின் செயற்பாட்டையும் மையமாகக் கொண்டு எழுதப்படும் இச்சிறு நூல் அறிவுபூர்வமான பிரஜைகளின் கலந்துரையாடலைச் சிருஷ்டிக்கும் கடினமான முயற்சிக்கு ஒரு உந்து சக்தியாக அமையும் என நாம் கருதுகின்றோம். இதுவே எமது பிரார்த்தனையுமாகும்.

**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
2014.01.29

## பிரஜை என்பவர் யார்?

“மனிதப் பிறவியினர் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.....” சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை ஒன்று இவ்வாறு கூறுகின்றது. பொதுவாக மனிதப் பிறவியினருக்கு உரித்தான இவ் உரிமைகள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சகல பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும். ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்கும் உரித்தான இவ் உரிமைகளுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட நாட்டின் அரசியல் அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளும் உண்டு. பிரஜைகளின் உரிமைகளைப் போலவே பிரஜைகளின் கடமைகளும் சிறந்த பிரஜைகள் சமூகத்திற்கு அவசியமாகும்.

சகல பிரஜைகளும் சமமானவர்கள். அவர்கள் பாரபட்சங்களுக்கோ, சமத்துவமின்மைக்கோ இலக்காகக் கூடாது.

**பொதுவாக மனிதப் பிறவியினருக்கு உரித்தான இவ் உரிமைகள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சகல பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும். ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்கும் உரித்தான இவ் உரிமைகளுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட நாட்டின் அரசியல் அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ள உரிமைகளும் உண்டு.**

**பிரஜை, ஓர் அரசியல் செயற்பாட்டாளர் ஆவார். அவர் ஓர் சமூகப் பிராணி. அவர் தனித்து வாழ முடியாது. தான் முற்பிறப்பில் செய்த வினைப்பயனாகவோ புண்ணியத்தின் பயனாகவோ சம்பவங்கள் இடம்பெறுகின்றன என பிரஜைகள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள்.**

ஆனால், இவ் அங்கீகாரமும், இணக்கப்பாடும் அரசியல் அமைப்பின் வாசகங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக் கூடாது. நடைமுறைக்கும் வாசகங்களுக்கும் இடையே எந்தவொரு நாட்டிலும் கூடக்குறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. வளர்ச்சி அடைந்த பிரஜைகள் வாழும் சமூகத்தில் பிரஜைகள் என்ற அபிமானம் நிலவும். அரசியல் அமைப்பின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் பிரஜைகளுக்கு உரித்தானவை. மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கு பிரஜைகளுக்கு உரிமை உண்டு. தான் விரும்பிய மதத்தை வழிபடுவதற்கும், தான் விரும்பிய மொழியைப் பேசுவதற்கும் பிரஜைகளுக்கு உரிமை உண்டு. அதேசமயம், பிரஜைகள் என்ற வகையில் ஏனைய பிரஜைகளின் உரிமைகளுக்கு ஒரு பிரஜை மதிப்பளிக்க வேண்டும். பிரஜைகள் என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட சம்பிரதாயங்களை மதிப்பதற்கும், அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்ட சட்டங்களுக்கு இணங்கி நடப்பதற்கும், பிரஜைகள் கடப்பாடு கொண்டவர்கள்.

ஆனால் மேற்படி அமைப்புக்கள் பொது மக்களை ஒடுக்கும் கட்டமைப்புகளாக செயற்படுமேயானால் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு வளர்ச்சி அடைந்த பிரஜைகளையே சாரும்.

பிரஜை, ஓர் அரசியல் செயற்பாட்டாளர் ஆவார். அவர் ஓர் சமூகப் பிராணி. அவர் தனித்து வாழ முடியாது. தான் முற்பிறப்பில் செய்த வினைப்பயனாகவோ புண்ணியத்தின் பயனாகவோ சம்பவங்கள் இடம்பெறுகின்றன என பிரஜைகள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள். சமூகத்திற்குப் பாதகமான, சமூகம் வெறுக்கத் தக்க நிலைமைகளை மாற்றி அமைத்து, சமூகத்திற்குச் சாதகமான முறையில் அதனை மாற்றி அமைப்பதற்கு பிரஜைகள் நேரடியாக இடையீடு செய்ய வேண்டும். இதற்கு அரசியல் அறிவு பிரஜைக்கு முக்கியமானது. இந்தியாவின் புதுடில்லி மாநிலத்தில் தேர்தலில் வெற்றியீட்டிய அர்விஸ்த் கெப்ரிமாலை விட அன்னா ஹசாரே இறக்கும் வரையான உண்ணா விரதத்திற்கு தலைமை தாங்கியதன்மூலம் மிக சக்தி வாய்ந்த மனிதராக மாறிவிட்டார். ஊழல்களுக்கும், மோசடிகளுக்கும் எதிரான அரசியல் தலைமைத்துவத்தைக் கோரி நின்ற மக்களின் வாக்குப் பலம்மூலம் அவர் வெற்றியீட்டினார்.

**அரசனில் இருந்து ஆரம்பித்து, சாதாரண பிரஜை வரை சட்டத்தின் ஆட்சியை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. சட்டத்தின் ஆட்சிக்கு உட்படாத ஒரு நாட்டில் அராஜகமே நிலவும்.**

## சட்டத்தின் ஆட்சியும் பிரஜையும்

அரசனில் இருந்து ஆரம்பித்து, சாதாரண பிரஜை வரை சட்டத்தின் ஆட்சியை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. சட்டத்தின் ஆட்சிக்கு உட்படாத ஒரு நாட்டில் அராஜகமே நிலவும்.

**பிரஜைகளின் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதன் மூலம், பிரஜைகளின் உரிமைகளை மீறிய குற்றத்திற்காக "வோரட்டர் கேட்" சம்பவம் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் தனது பதவியைத் துறப்பதற்குக் காரணமாக அமைந்தது.**

பிரித்தானிய அரசர்களின் ஆட்சி நிலவிய காலத்தில் அரசர்கள் சட்டத்தின் ஆட்சியை தாம் பொறுப்பேற்றுக் கொண்டனர். இதனால், பிரஜைகள் ஒடுக்கப்படுவதை மட்டுப்படுத்துவதற்கு 1215 இல் மெக்னா கார்ட்டா கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. பிரஜைகளுக்கும் அரசர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டமையே இதற்குக் காரணமாகும். சட்டத்தின் ஆட்சியையும், நீதித் துறையின் சுதந்திரத்தையும் வலுப்படுத்துவதற்காக இங்கிலாந்தின் அரசத் தலைவனுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் உள்ள உரிமைகள் சாதாரண பிரஜைகளுக்கும் உண்டு. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் சபாநாயகரும், அமைச்சரும் பதவி விலக நேரிட்டது. பிரஜைகளின் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதன்மூலம், பிரஜைகளின் உரிமைகளை மீறிய குற்றத்திற்காக "வோரட்டர் கேட்" சம்பவட" அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் தனது பதவியைத் துறப்பதற்குக் காரணமாக அமைந்தது. நாவுறு தீவுகளில் பிரஞ்சுக் கம்பனி மேற்கொண்ட சுரங்க அகழ்வு காரணமாக அங்கு வாழ்ந்த பிரஜைகளுக்கு ஒரு சொட்டுக் குடிநீரேனும் பெறமுடியாத நிலை உருவாகியது. இதன் காரணமாக மேற்படி பிரஞ்சுக் கம்பனி அகழ்வாராய்ச்சியின் பின்பு அப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி இருந்தாலும், சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கு விசாரணை

செய்யப்பட்ட பின்னர், பிரான்சில் வாழுகின்ற பிரஜைகளின் உரிமை நாவுறு தீவுகளில் வாழும் பிரஜைகளுக்கும் உண்டு என சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, மேற்படி தீவுகளில் வாழும் பிரஜைகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு பிரஞ்சு அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. கீரத்திமிகு இலங்கை நீதியரசரான திருவாளர் சீ.ஜீ. வீரமந்திரி அவர்களே இவ்வழக்கை விசாரித்தார்.

**தான் விரும்பிய அரசியல் கட்சிக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெறுவது சகல பிரஜைகளினதும் உரிமையாகும். ஆனால், மேற்படி உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.**

## சுதந்திரமான வாக்குரிமையும் பிரஜைகளும்

தான் விரும்பிய அரசியல் கட்சிக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெறுவது சகல பிரஜைகளினதும் உரிமையாகும். ஆனால், மேற்படி உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இலங்கையில் 1999 ஜனவரி 25 ஆந் திகதி இடம்பெற்ற் வடமேல் மாகாண சபைத் தேர்தலின்போது, பிரஜைக்குரிய மேற்படி உரிமை படுமோசமான முறையில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

வாக்குச் சாவடியில் நுழைந்து, வாக்காளர்களைத் தாக்கி, வாக்குகளை வாக்குக் கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாப்பதையும், வாக்குச் சாவடியைப் பாதுகாப்பதற்கும் வருகை தந்த பிரஜைகளைத் தாக்கி கைது செய்யும் கொள்கை அன்று அமுலுக்கு வந்தது.



சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடுதல், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் ஆகிய குற்றச் சாட்டுக்களைக் 'கெக்குனுகொள்ள' வாக்கு நிலையத்தின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் உட்பட பலர் முன்வைத்து முறைப்பாடு செய்தனர். "இக்குற்றச் சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் மேற்படி வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது அவர்களுடைய வாக்குகள் ஏற்கனவே போடப்பட்டு இருந்தது. மேற்படி வாக்காளர்கள் திருப்பி அனுப்பப்படுவதை, பொலீசார் அவதானித்துக் கொண்டிருக்கத் தக்கதாகவே,குண்டர்கள்வாக்குகளைஇட்டுச் சென்றுள்ளனர். தேர்தல் உத்தியோகத்தர்கள் இத்தகைய சூழ்நிலையிலேயே உண்மை வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் திருப்பி அனுப்பி இருந்தனர்."

பிரதிவாதியின் சட்டத்தரணிகள் இவ்வாறாக நீதிமன்றத்தில் எடுத்துரைத்தனர். மக்களுக்கு சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்பட்டுள்ள வாக்குரிமையைப் பாதுகாத்து அமைதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலீசார் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 48 ஆவது வாசகத்திற்கு அமைய

1. ஏதாவது இயற்கை சம்பவங்கள் காரணமாக, (அ) வாக்குகளை இடுவதற்கு குறிப்பிட்ட நேரம்

ஆரம்பிக்கு முன்னர், ஒரு வாக்குச் சாவடியில் வாக்குகளைப்போட ஆரம்பிக்க முடியாது. அல்லது



(ஆ) வாக்களித்தல் ஆரம்பிப்பதற்குரிய நேரத்தில், மேற்படி வாக்குச் சாவடியில் வாக்களித்தல் ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும், வாக்களிப்பை முடித்து வைக்க வேண்டிய நேரம்வரை அதனைத் தொடர்ந்து நடத்த முடியாவிட்டால் அல்லது

(இ) வாக்குச் சாவடிக்கு ஒதுக்கப்பட்ட எந்தவொரு வாக்குப் பெட்டியில் உள்ள வாக்குகளை எண்ணும் தேர்தல் அதிகாரிக்கு ஒப்படைக்க முடியாத சந்தர்ப்பத்தில், மேற்படி வாக்களிப்பு நிலையத்தின் தேர்தல் நிலையப் பொறுப்பதிகாரி உடனடியாக இவ் விடயம்பற்றி தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும். அவர் அதனை தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

2. ஒரு தேர்தல் வட்டாரத்தில் ஒரு வாக்குச் சாவடி தொடர்பாக (முதலாவது உபவாசகத்தின் கீழ் ஓர் அறிவித்தல் கிடைத்தவுடன், அந்த அறிவித்தலின் உண்மைத் தன்மையை தீர்மானிப்பதற்கு அவசியம் என ஆணையாளர் கருதினால், உரிய விசாரணையின் பின்னர் மேற்படி தேர்தல் நிலையத்தில் இடம்பெற்ற

**அரச சேவை பிரஜைகளின் நன்மைக்காகவே உருவாக்கப் பட்டுள்ளது. வாக்காளர்களை ஒடுக்கு முறைக்கு ஆளாக்கும் வகையில் அது செயற்படக் கூடாது.**

தேர்தலை செல்லுபடியற்றதாக்கு வதற்கு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடும் ஒரு கட்டளை மூலம் தேர்தல் ஆணையாளர் பிரகடனப்படுத்த முடியும்.

1999 ஏப்பிரல் 06 ஆந் திகதி இடம்பெற்ற மத்திய மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தலின்போது இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகள் காரணமாக சுதந்திரமான தேர்தலுக்கான தனக்குரிய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதெனக் கோரி கண்டி உடுதும்பற பிரதேசத்தின் 04 வாக்காளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம், மேற்படி தேர்தலின்போது கண்டி மாவட்டத்தின் 23 தேர்தல் நிலையங்களில் நியாயமான தேர்தல் இடம்பெறவில்லை என்றும் தேர்தல் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதெனவும் தீர்மானித்தது. இதன் காரணமாக, அடிப்படை உரிமை மீறப்பட்ட 04 வாக்காளர்களுக்கு வழக்குச் செலவைக் கட்டணமாகச் செலுத்தும்படி நீதிமன்றம் கட்டளையிட்டது. ஒரு தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், சமத்துவமாகவும், அந்தரங்கமாகவும் இடம்பெற வேண்டும் வாக்குச் சாவடியில் பலாத்காரமாக நுழைவது மேற்படி அனைத்துக் கோட்பாடுகளையும் இல்லாதொழிக்கிறது.

## சுதந்திரமான அரச சேவையும், பிரஜையும்

அரச சேவை பிரஜைகளின் நன்மைக்காகவே

உருவாக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களை ஒடுக்கு முறைக்கு ஆளாக்கும் வகையில் அது செயற்படக் கூடாது.

அரசியல் அதிகாரத்தைப் பெறுவோர் அரச சேவையைத் தமது அதிகாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஓர் ஆயுதமாக மாற்றிக்கொண்டால், அரச ஊழியர் பிரஜைகளின் உரிமைகளுக்கு மதிப்பளிக்காதவராகவும், ஒடுக்குபவராகவும் மாறிவிடுகிறார். மறுபுறம் அரச ஊழியரும் ஒரு பிரஜையாவார். சுயாதீனமான அரச சேவையில் ஈடுபடும் அவரது உரிமையை பறிமுதல் செய்வதும் பிரஜை என்ற வகையில் அவருடைய உரிமையை மீறுவதாகும்.

**அரச ஊழியரும் ஒரு பிரஜையாவார். சுயாதீனமான அரச சேவையில் ஈடுபடும் அவரது உரிமையை பறிமுதல் செய்வதும் பிரஜை என்ற வகையில் அவருடைய உரிமையை மீறுவதாகும்.**

எனவேதான் உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சுதந்திரமான அரச சேவையை முன்னெடுத்துச் செல்வது சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாதுவிடின் ஒட்டுமொத்த அரச சேவையைப் பலவீனப்படுத்தி, அதனை அரசியல் பகடைக் காயாக மாற்றி, நல்லாட்சி குழிதோண்டி புதைக்கப்படுகிறது. அரசியல் பழிவாங்கல் காரணமாக மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள், சேவை இடைநிறுத்தங்கள், பொய்க் குற்றச்சாட்டுக்களைத் திரட்டி கைது செய்தல், ஒருவருடைய நற்பெயருக்கு களங்கம் விளைவித்தல் என்பன நல்லாட்சிக்கு எதிரானவையாகும். சில சமயம் இந்த நடவடிக்கைகள் நீடிக்கப்படலாம். ஓர் அரசியல் தூண்டில் இரையாகவே இலங்கையின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் கடந்த காலத்தில்

**சமூக நலனோம்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் என்ற வகையில் கிராம அலுவலர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பாரபட்சமற்ற நடுநிலையான அதிகாரிகளாக சேவை புரிவதே அவர்களது கடமைப் பொறுப்பாகும்.**

செயற்பட்டது. வாழ்க்கை மட்டத்தில் வறுமை நிலையில் இருக்கும் பிரஜைகள் குறை போசாக்கு கொண்டவர்களாக வாழ்கின்றனர். இவர்களை மேம்படுத்துவதற்கு ஓர் வழிகாண வேண்டும். ஆனால், அதுவும் போலித் தேர்தல் வாக்குறுதியாகவே அமைந்தது. பங்கீட்டரிசிப் புத்தகம், உணவு முத்திரை, ஜனசவிய அட்டை, சமுர்த்தி அட்டை என்ற வகையில் வறியவர்களை கட்டுப்படுத்தும் ஓர் அங்குசமாக பல அரசியல்வாதிகள் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

சமூக நலனோம்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் என்ற வகையில் கிராம அலுவலர்களும், சமுர்த்தி உத்தி யோகத்தர்களும் பாரபட்சமற்ற நடுநிலையான அதிகாரிகளாக சேவை புரிவதே அவர்களது கடமைப்பொறுப்பாகும். ஆனால் தேர்தல் நெருங்கும்போது இவ்விடயம் பாரிய நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. அண்மைக் கால வரலாற்றில் சமுர்த்தி அதிகாரிகள் அரசாங்கத்தின் தேர்தல் இயக்கங்களுக்கு நேரடியாகவே தொடர்பு படுத்தப்பட்டனர்.

ஆனால், அரச உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமைக்குப் பரிகாரமாக அடிப்படை உரிமைகள் உள்ளன. இது வலுவாக்கம் பெறும் சந்தர்ப்பங்களைச் சுட்டிக் காட்டுவது ஏற்புடையதாகும்.

1997 மார்ச் 05 ஆந் திகதி பிரதி சபாநாயகர் அணில் முனசிங்க அவர்களின் கையெழுத்தின் கீழ் கையொப்பமிட்டு மத்துகம பிரதேசத்தின்

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. எதிர்வரும் பிரதேச சபைத் தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தேர்தல் இயக்கத்தில் ஈடுபட வேண்டுமென மேற்படி கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருந்தது.

இச் சந்தர்ப்பத்தில் நேபொட சமுர்த்தி உத்தியோகத்தரான டி.ரஞ்ஜித் ரூபசிங்க சமுர்த்தி உத்தியோத்தர்கள் அழைக்கப்பட்டு இருந்த மேற்படி கூட்டம் ஒன்றில் இதற்கு தமது எதிர்ப்பைச் சுட்டிக் காட்டி இருந்தார். இதன் விளைவாக, தொடங்கொட பிரதேசச் செயலாளர் அவரது சேவையை இடைநிறுத்தினார். இதற்கு எதிராக சமுர்த்தி உத்தியோகத்தர் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு மனுவைச் சமர்ப்பித்தார்.

பிரதிவாதியின் நடவடிக்கைகள் காரணமாக அரசியல் அமைப்பின் 12(1) மற்றும் 12(2) உறுப்புரைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரச ஊழியர் தான் விரும்பிய அரசியல் கருத்தைக் கொண்டிருக்க முடியும். இவ் உரிமை மீறப்படுதல் நீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு ஆளானது. எனவே தமது சொந்தப் பணத்தில் இருந்து மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்குமாறு பிரதிவாதிக்கு (பிரதேசச் செயலாளருக்கு) நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதற்கு மேலதிகமாக சமுர்த்தி

**அரச ஊழியர் தான் விரும்பிய அரசியல் கருத்தைக் கொண்டிருக்க முடியும். இவ் உரிமை மீறப்படுதல் நீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு ஆளானது. எனவே தமது சொந்தப் பணத்தில் இருந்து மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்குமாறு பிரதிவாதிக்கு (பிரதேசச் செயலாளருக்கு) நீதிமன்றம் கட்டளையிட்டது.**

**சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முறையற்ற வகையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நபர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு வகைப்பொறுப்பு கூறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி வழக்குத் தீர்ப்பின் பிரதி ஒன்று கணக்காளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.**

உத்தியோகத்தர்கள் முறையற்ற வகையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நபர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு வகைப்பொறுப்பு கூறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி வழக்குத் தீர்ப்பின் பிரதி ஒன்று கணக்காளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் பின்னணியை நோக்கும்போது, ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சி, சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் வாக்காளர் பிரஜைகளுக்கு செல்வாக்குச் செலுத்துவதை அடையாளம் காண முடிகிறது. அரசாங்கக் கட்சியின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்காவிட்டால் சமுர்த்தி நிவாரணம் இல்லாதொழிக்கப்படும் என்ற செய்தியே இதன் மூலம் தெரிவிக்கப் படுகிறது. பல்வேறு கட்சிகளுக்குரிய பிரஜைகளின் வாக்களிக்கும் உரிமையை சமுர்த்தி நிவாரணத்தின்மூலம் மீறுவது மற்றும் கட்சி சார்பற்ற முறையில் கடமைகளைச் செய்ய இடமளிக்காமை ஒரு பிரஜையின் உரிமையை மீறுவது ஆகிய இரண்டு குற்றங்களும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

## தகவல்களை அறியும் உரிமையும் பிரஜையும்

சுதந்திரமானகருத்துக்களைக்கொண்டிருப் பதற்கும், அதனை வெளிப்படுத்துவதற்கும் எவரது தடையுமின்றி கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும், உள்நாட்டு எல்லைகளைக்

கருத்தில்கொள்ளாது எந்தவொரு கருத்தைக் கொண்டிருப்பதற்கும் எந்தவொரு ஊடகத்தின் மூலமேனும் தகவல்களைப் பெறுவதற்கும், அவற்றை வெளியிடுவதற்கும் பிரஜைகளுக்கு உரிய உரிமையை எவரும் மீறமுடியாது. சரியான தகவல்களைப் பெறும் உரிமையை உத்தரவாதப்படுத்துவது ஆரோக்கியமான நல்லாட்சி நிலவுவதை உறுதி செய்யும்.

**சரியான தகவல்களைப் பெறுவதைத் தடை செய்தல், பொய் மற்றும் மூட நம்பிக்கைகளை உறுதி செய்வதற்கு காரணமாக அமைகிறது. பிரஜைகள் செயற்பாடு கொண்ட ஆட்சியின் பங்காளர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பத்திற்கு இது தடையாக அமைகிறது.**

சரியான தகவல்களைப் பெறுவதைத் தடை செய்தல், பொய் மற்றும் மூட நம்பிக்கைகளை உறுதி செய்வதற்கு காரணமாக அமைகிறது. பிரஜைகள் செயற்பாடு கொண்ட ஆட்சியின் பங்காளர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பத்திற்கு இது தடையாக அமைகிறது. தகவல் பெறும் உரிமை அரசியல் அமைப்பின் மூலமும் பல்வேறு சர்வதேச சமவாயங்கள் மூலமும் விசேட ஏற்பாடுகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட, தகவல் அறியும் உரிமை பற்றிய சட்ட வரைவு அரசாங்கத்தின் பெரும் பான்மை வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது. இதன் விளைவுகள் அரசாங்க அதிகாரத்தைக் கொண்டோருக்கும் மறைமுகமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனைத் தடுக்க முடியாது. அரச துறையின் நிறுவனங்களின் கட்டமைப்பின் வகைப்பொறுப்பும், கடமைகளும் பற்றிய சரியான தகவல்களைப் பெறும் ஒரு வழிமுறை பிரஜைகளுக்கு அவசியம்.

மேற்படி தகவல்களை அறிவது,

**தகவல்களை வழங்கும்போது பிரஜைகள் அவற்றை சரளமாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அவை தயாரிக்கப்பட வேண்டும். அதேசமயம் அவை சிக்கலற்றவையாகவும் அமைய வேண்டும். பொதுமக்கள் தமது சேவைகளை வழங்கிய நிறுவனங்களில் மேற்படி தகவல்கள் சிறந்த முறையில் தெரியக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.**

மோசடிகளையும், ஊழல்களையும், இலஞ்சத்தையும் தடுப்பதற்கு பேருதவியாக அமையும். இதற்கு அரசு நிதி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதாவது அரச நிறுவனங்கள்மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள் மேற்படி சேவைகளைச் செய்யும் முறை மற்றும் சேவைகளை வழங்க வேண்டிய குறிப்பிட்ட காலம் போன்ற தகவல்களை இந்த நிதி ஏற்பாடுகளில் உள்ளடக்க முடியும். சேவைகள் உரிய முறையில் கிடைக்காத சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய விளக்கம் பிரஜைகளுக்கு வழங்க வேண்டும். தகவல்களை வழங்கும்போது பிரஜைகள் அவற்றை சரளமாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அவை தயாரிக்கப்பட வேண்டும். அதேசமயம் அவை சிக்கலற்றவையாகவும் அமைய வேண்டும். பொதுமக்கள் தமது சேவைகளை வழங்கிய நிறுவனங்களில் மேற்படி தகவல்கள் சிறந்த முறையில் தெரியக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

## பிரஜை ஓர் அரசியல் செயற்பாட்டாளர்

அரசியல் என்ற சொற்றொடர் அனேகமாக தேர்தல் நெருங்கும்போதே மக்கள் மத்தியில் பேசு பொருளாக அமையும். தேர்தலின் பின்னர் அரசியலை பொதுமக்கள் மறந்து விடுவர். அதன் பின்னர் அது அரசியல்வாதிகளாலே தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும். இது அரசியல் ரீதியில் பின்னடைவு

**முன்னேற்றகரமான அரசியல் கலாசாரம் கொண்ட நாடுகளில் பிரஜைகள் அரசியலில் செயற்பாட்டு ரீதியான பங்காளர்கள் ஆவர்.**

கொண்டுள்ள கலாசாரங்கள் நடைமுறையில் உள்ள நாடுகளின் பண்புகளாகும். முன்னேற்றகரமான அரசியல் கலாசாரம் கொண்ட நாடுகளில் பிரஜைகள் அரசியலில் செயற்பாட்டு ரீதியான பங்காளர்கள் ஆவர். இந் நாடுகளில் பிரஜை என்பவர் அரசியல் கலந்துரையாடலில் வாழ்கின்றார். தேர்தலில் வாக்களித்த பின்னர் ஆட்சியாளர்களுக்கு அனைத்து பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டு, அமைதியாகத் தமது சொந்த பொறுப்புக்களைக் கையளித்துவிட்டு, அமைதியாகத் தமது வேலைகளில் ஈடுபடும் பழக்கம் மேலைநாட்டுப் பிரஜைகளுக்கு இல்லை. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் (1)வாசகத்தில் குறிப்பிடப் படுவது போல ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குகொள்வதற்கு உரிமை உண்டு.

3 ஆம் வாசகத்திற்கு அமைய மக்களின் விருப்பே அரசாங்கத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ் விருப்பானது, காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத் தேர்தல்கள் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்பு உரிமை மூலமே இருத்தல் வேண்டும் என்பதுடன், இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

**இறையாண்மை அதிகாரம் மக்களுக்கே உண்டு. பொதுமக்கள் வாக்களிப்பு மூலம் மேற்படி இறையாண்மை அதிகாரத்தை ஆட்சியாளர்களிடம் தற்காலிகமாக ஒப்படைக்கின்றனர்.**

இறையாண்மை அதிகாரம் மக்களுக்கே உண்டு. பொதுமக்கள் வாக்களிப்பு மூலம் மேற்படி இறையாண்மை அதிகாரத்தை ஆட்சியாளர்களிடம் தற்காலிகமாக ஒப்படைக்கின்றனர். ஆட்சியாளர்கள் இறையாண்மையை அமுல்படுத்துகின்றனர். அப்போது மேற்படி அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவார்களேயாயின் அவ் அதிகாரத்தை அரசியல்வாதியிடம் இருந்து மீட்டெடுக்கும் சக்தி பொது மக்களுக்கே உண்டு. அதற்கமைய தமது வாக்கைப் பயன்படுத்திய பின்னர் ஆட்சியாளர் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்வதற்கு இடமளித்து அமைதியாக இருத்தல் பிரஜைகளின் கடமையல்ல. பிரஜை அரசியல் துறையில் அறிவார்ந்த ஒரு பங்காளர் ஆவார். தனக்கு எதிராக ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் அதிகாரம் தமது வாக்குரிமை மூலமே ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வது பிரஜையின் முக்கிய கடமையாகும்.


இலங்கை அரசியல் அமைப்பின் 3 ஆம் உறுப்புரையில் மக்களுக்கு உரித்தான இறையாண்மை பின்வருமாறு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக் குடியரசின் இறையாண்மை மக்களுக்கு உரியதாகவும், பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறையாண்மை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை

உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

இறையாண்மை பிரயோகிக்கப்படும் முறை 4 வது அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

(அ) மக்களது சட்டமாக்கும் தத்துவம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.



**முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன**

(ஆ) இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட, மக்களது ஆட்சித்துறைத் தத்துவம், மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசு ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.



**தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ**

அரசியல் அமைப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படுவதற்கு அமைய அதிகாரம் இரட்டைத் தன்மையுடன் செயற்படும் காரணத்தினால், பொதுமக்களின் இறையாண்மை அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது என கலாநிதி என்.எம்.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

பிரஜை அரசியலில் செயற்பாடுடைய பங்காளராவது பற்றி இலங்கையில் ஓர் பின்னடைவான மனப்பாங்கே உள்ளது. பிரஜைகளில் பெரும்பான்மையினர் இறையாண்மை



**கலாநிதி என்.எம். பெரேரா**

**நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படுவதற்கு அமைய அதிகாரம் இரட்டைத் தன்மையுடன் செயற்படும் காரணத்தினால், பொதுமக்களின் இறையாண்மை அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது என கலாநிதி என்.எம்.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.**

அதிகாரம் அரசியல்வாதிகளிடமே உண்டு என்ற கண்ணோட்டத்தில் செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதன் காரணமாக மக்களை ஒடுக்குவதற்கும் ஊழல்களையும், மோசடிகளையும் மேற்கொள்ளவும் ஆட்சியாளர்களால் முடிந்துள்ளது. உதாரணமாக 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் பிரத நீதியரசரான திருமதி ஷிராணி பண்டாரநாயக்க அவர்களை பதவி நீக்கம் செய்த வழிமுறை இதற்கு உதாரணமாகும்.

அரசாங்கம் குறை வருமானம் கொண்டோரின் வாழ் நிலையை மேம்படுத்துவதற்கு முன்வைத்த வாழ்வின் எழுச்சி (திவி நெகும) சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் வாழ்வெழுச்சிச் சட்டத்தின் பல விடயங்கள் மாகாண சபைகளுக்கு உரித்தானவை என்ற காரணத்தினால் இதுபற்றி ஒரு பொருள்கோடலைக் கேட்டு அல்லது கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உட்பட பல பிரஜைகள் உயர்நீதிமன்றத்தில் சில மனுக்களைச் சமர்ப்பித்தனர். பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்காவை முதல்வராகக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இச்சட்டம் சகல மாகாண சபைகளின் இணக்கப்பாட்டுடன் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தது.

இத் தீர்ப்பை ஏற்காத அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. இதற்கு எதிராக சில பிரஜைகளே முன்நின்று செயற்பட்டனர். இங்கு இரண்டு முக்கிய விடயங்களை அவதானிக்க முடியும்.

இதில் முதலாவது விடயம் நீதித்துறை என்ற விடயம் ஆட்சியாளர்களுக்கு உரித்தானது என்று கூறியவாறு வழக்கு விசாரணையின்போது மாத்திரமே அது பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்ற மனப்பாங்கு சமூகத்தில் வேரூன்றி உள்ளது. இங்கு பொதுமக்கள் என்ற போர்வையில் ஆட்சியாளர்கள் வரவழைத்த உதிரிப் பாட்டாளிகள் மக்களின் போர்வையில் உயர்நீதிமன்ற வளாகத்தில் வந்து குவிந்தனர். பிரதம நீதியரசரை பதவிநீக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றுகூடிய மக்கள் குண்டர்களின் தாக்குதல்களுக்கு ஆளாகினர்.

இவ்வாறான ஒரு தலைப்பட்சமான செயற்பாடு பொதுமக்கள் மத்தியில் இருந்து பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையவில்லை. ஷிராணி பண்டாரநாயக்க சட்டரீதியாக நீக்கப்படாததன் காரணமாக அவர் இன்றும் பிரதம நீதியரசராக இருந்த போதிலும் அவரைப் பற்றிய கலந்துரையாடல் பிரஜைகள் சமூகத்தில் உருவாக்கப்படவில்லை.

**வாழ்வெழுச்சிச் சட்டத்தின் பல விடயங்கள் மாகாண சபைகளுக்கு உரித்தானவை என்ற காரணத்தினால் இதுபற்றி ஒரு பொருள்கோடலைக் கேட்டு அல்லது கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உட்பட பல பிரஜைகள் உயர்நீதிமன்றத்தில் சில மனுக்களைச் சமர்ப்பித்தனர்.**

**நீதித்துறை என்ற விடயம் மீது பொதுமக்களின் பங்களிப்பு அரசியல் அமைப்பின்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், பிரஜைகள் அது குறித்து பேசாமடந்தை களாகவே இருக்கின்றனர். இது முக்கியமாக நாம் அவதானிக்கக் கூடிய ஓர் விடயமாக அமைந்துள்ளது.**

நீதித்துறை என்ற விடயம் மீது பொதுமக்களின் பங்களிப்பு அரசியல் அமைப்பின்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், பிரஜைகள் அது குறித்து பேசாமடந்தைகளாகவே இருக்கின்றனர். இது முக்கியமாக நாம் அவதானிக்கக் கூடிய ஓர் விடயமாக அமைந்துள்ளது. அரசியல் அமைப்பின் 4(இ) வாசகம் பின்வருமாறு கூறுகிறது. “பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டு உரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயத்தில்தவிர, அரசியல் அமைப்பினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட அல்லது அரசியல் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், நிறுவனங்கள் ஆகியன மூலம் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டும்.”

இங்கு குறிப்பிட்டுள்ளவாறு பொதுமக்களின் நீதித்துறை அதிகாரம் அரசியல் அமைப்பு ஏற்றுக்கொண்ட நிறுவன கட்டமைப்பு மூலம் அமுல்படுத்தப்படுகிறது. பிரஜைகளின் வாக்களிப்புகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளினால் உருவாக்கப்படும் சட்டவாக்கத்துறை என்றே அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மக்களுக்கு உரித்தான இறையாண்மை அதிகாரம் இரட்டைத்

தன்மை கொண்டு இருப்பதன் காரணமாக நிறைவேற்றுத்துறை நீதிமன்றத்தை கட்டுப்படுத்தும் பாதிப்பு செயற்படுத்தப்பட்டு பிரஜைகள் செல்லுபடியாகாத காசாக மாற்றப்பட்டுள்ளனர். இங்கு பிரஜைகள் மக்களின் இறையாண்மையை அமுலாக்குவதற்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டியது பிரஜையின் கடமையாகும். அவ்வாறு இல்லாவிடின். அதனைசெயற்படுத்தக்கூடியபொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் வகையில் அதனைச் செயற்படுத்த வேண்டும்.

**மக்களுக்கு உரித்தான இறையாண்மை அதிகாரம் இரட்டைத் தன்மை கொண்டு இருப்பதன் காரணமாக நிறைவேற்றுத்துறை நீதிமன்றத்தை கட்டுப்படுத்தும் பாதிப்பு செயற்படுத்தப்பட்டு பிரஜைகள் செல்லுபடியாகாத காசாக மாற்றப் பட்டுள்ளனர்.**

பிரஜைகளின் அரசியல் செயற்பாடுகள் மூலம் நன்மையான பெறுபேறுகளை அடைந்த ஒரு சந்தர்ப்பத்தை இங்கு எடுத்துக் கூறமுடியும்.

எப்பாவெல பொஸ்பேட் நிதி, அமெரிக்காவின் மெக்மோரன் கம்பனிக்கு தாரைவார்த்துக் கொடுக்க அரசு மேற்படி கம்பனியுடன் ஒரு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு இருந்தது. அரச தரப்பினரின் சார்பில் இவ் ஒப்பந்தத்தில் சட்டமா அதிபர் கையொப்பம் இட்டு இருந்தார். இவ் ஒப்பந்தம் அமுலாக்கப்படுவதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளுக்கு எதிராக வடமத்தியமாகாணத்தைமையப்படுத்திபாரிய மக்கள் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மஹுமான்கடவல பியரத்தன நாயக்க தேரர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இவ் எதிர்ப்பை அமுல்படுத்தினர்.

**எப்பாவெல பொஸ்பேட் நிதி, அமெரிக்காவின் மெக்மோரான் கம்பனிக்கு தாரை வார்த்துக் கொடுக்க அரசு மேற்படி கம்பனியுடன் ஒரு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு இருந்தது. அரச தரப்பினரின் சார்பில் இவ் ஒப்பந்தத்தில் சட்டமா அதிபர் கையொப்பம் இட்டு இருந்தார்.**

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், இடையூறுகளுக்கும்,சேறுபூசல்களுக்கும் இடையில் மக்கள் போராட்டம் உயிர்ப்பிக்கப்பட்டது. அதன் இடையே இவ் ஒப்பந்தம் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் 5 பிரஜைகள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மீறல் வழக்கைத் தொடுத்தனர். மேற்படி மனுவை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் இப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமையை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு நஷ்டஈடு வழங்குவதற்குப் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டது. அதே சமயம் மேற்படி ஒப்பந்தத்தை வலு இழக்கச் செய்து, தேசிய விஞ்ஞான மன்றத்தின் பரிந்துரைகளையும் கவனத்திற்கொண்டு பொஸ்பேட் நிதியம் பற்றி முழுமையான ஆய்வினை மேற்கொண்டு, உள்நாட்டு பசளைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சுற்றாடல் பாதிக்காத வகையில் மேற்படி பொஸ்பேட் நிதியம் பயன்படுத்துவதற்குப் பரிந்துரை செய்யப் பட்டது.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்கு விசாரணை கலாநிதி ஏ.ஆர்.பி.அமரசிங்க, மார்க் பிரணாந்து ஆகிய கீர்த்திமிகு நீதியரசர்களால் மேற்கொள்ளப்பட்டது.

## பிரஜைகளின் பங்கேற்புக்கான பிரவேசம்

**பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம், சுகாதாரம் போன்ற பல துறைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான பல அனுபவங்கள் சமூகத்தில் உண்டு.**

பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம், சுகாதாரம் போன்ற பல துறைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான பல அனுபவங்கள் சமூகத்தில் உண்டு. இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கிராமீய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களிடையே ஜனசவிய மற்றும் சமுர்த்தி இயக்கம் பரந்துபட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியது.

ஜனசவிய இயக்கத்தின் கீழ் அடிமட்டச் சிறு குழுக்களின் சேமிப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஜனசக்தி வங்கி அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டது. வங்கி வெற்றிகரமாகச் செயற்படும் கட்டத்தில் நிதி முகாமைத்துவத்தில் சில பிரச்சினைகள் உருவாகத் தொடங்கின. கணக்காய்வு தொடர்பான அறிவு, வங்கியின் செயற்பாட்டாளர்களுக்கு இல்லாமையே இதற்குக் காரணமாகும். இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு கணக்காய்வு பற்றிய அறிவை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆட்சி மாறி ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிலாக வேறு பெயரில் நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டாலும் ஜனசக்தி வங்கி மேலிருந்து கீழ் வரை செயற்படும்

**ஜனசக்தி வங்கி மேலிருந்து கீழ் வரை செயற்படும் நெறிப்படுத்தல் இன்றி சுயாதீனமாக முன்னோக்கிச் சென்றது. இங்கு பிரஜைகளின் பங்களிப்பு பாராட்டக் கூடிய வகையில் நிலவியதே காரணமாகும்.**

நெறிப்படுத்தல் இன்றி சுயாதீனமாக முன்னோக்கிச் சென்றது. இங்கு பிரஜைகளின் பங்களிப்பு பாராட்டக் கூடிய வகையில் நிலவியதே காரணமாகும். அதேசமயம் சணச நிறுவனமும் மக்கள் பங்கேற்புடன் செயற்பாட்டு ரீதியில் வளர்ச்சி அடைந்த ஒரு நிறுவனமாகக் காணப்படுகிறது.

வரி சேகரித்தல் செயற்பாடு பொதுமக்களின் பங்கேற்புடன் உயிரோட்டம் கொண்ட வகையில் சுயசக்தி மூலம் செயற்படும் ஆற்றல் கிடைத்த பிரதேச சபைகள், நகர சபைகள் ஒரு சிலவற்றில் வாரியபொல பிரதேச சபை கிராமீய சுற்றாடலில் அமைந்த பிரதேச சபையாக மக்கள் பங்கேற்புடன் குறிப்பிட்டதொரு மாற்றத்தை ஏற்படுத்திய உள்ளூராட்சி நிறுவனமாக அடையாளம் காணப்பட்டது.

2005 ஆம் ஆண்டு ஆகும்போது 21 மக்கள் பிரதிநிதிகள் கொண்ட பிரதேச சபை நிலுவையில் உள்ள வரிப்பணத்தை அறவிடுவதில் ஒரு பலவீனமான தன்மையைக் கொண்டிருந்தது. எனவே அது நிதி நெருக்கடியை எதிர்நோக்கியது. இங்கு ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் செயற்படும் சர்வதேச நகர கிராமீய முகாமைத்துவ ஆலோசனை நிறுவனம் வாரியபொல பிரதேச சபையின் ஆலோசனைச் சேவையை நிறுவ முன்வந்தன.



இங்கு வரிப்பணம் செலுத்தும் ஏற்புடைமை பற்றி பிரதேச சபையும் பொதுமக்களுக்குமிடையேயான உறவு பற்றி ஓர் அறிவூட்டல் நிகழ்ந்தது. வரிப்பணம் செலுத்தாதுவிடின் அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளைப் பற்றியும் பொதுமக்கள் அதனால் பாதிக்கப்படும் வழிமுறைபற்றியும் சிறந்த விளக்கம் வழங்கப்பட்டு ஒரு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது.

“வரிப்பணம் சேகரிக்கும் வார்த்தை” செயற்படுத்துவது அதன் ஒரு நடவடிக்கையாகும். வரிப்பணம் செலுத்துவதைத் தவிர்ப்போரின் பெயர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தின் அறிவித்தல் பலகைகளில் பகிரங்கப்படுத்துவதற்கு பொதுமக்களின் இணக்கம் கிடைத்தது. அதேசமயம் பிரதேச சபைமூலம் புதிய வருமான வரிக்கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் பெறுபேறாக இந் நிகழ்ச்சியை அமுல்படுத்துவதற்கு முன்னர் சேகரிக்கப்பட்ட வரிப்பணத்தின் தொகையைவிட மும்மடங்கு வரிப்பணத்தைச் சேகரிக்கும் ஆற்றலை பிரதேச சபை பெற்றது. எனவே, பிரதேச சபையின் நடவடிக்கைகளில் 80% ஆனவை வரிப்பணத்தில் இருந்து அமுலாக்க முடிந்தது.

**பிரஜைகளின் மனப்பாங்கில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தது. அவர்களின் செயற்பாட்டு ரீதியான பங்கேற்பும், பணிக்குழுவின் உற்சாகமும், ஆர்வமும் இங்கு முக்கிய இடம் வகித்தன.**

பிரஜைகளின் மனப்பாங்கில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தது. அவர்களின் செயற்பாட்டு ரீதியான பங்கேற்பும், பணிக்குழுவின் உற்சாகமும், ஆர்வமும் இங்கு முக்கிய இடம் வகித்தன.

இப்பிரஜைகளின் பங்கேற்பு பிரவேசம் சட்டரீதியான நடவடிக்கைகளைவிட நடைமுறையில் வெற்றியை அளித்தது.

## அரச சேவைகள் ஆணைக்குழு



அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பொலீஸ் உத்தியோகத்தர் உட்பட அரச அதிகாரிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், மற்றும் அவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது பற்றிய அதிகாரங்கள் அரச சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையோடும் மேற்கொள்ளப்படும் வினைத்திறன் வாய்ந்த ஒழுக்க ரீதியான அரச சேவையை ஸ்தாபிப்பது அரச சேவைகள் ஆணைக்குழுவின் குறிக்கோளாகும். இலங்கையின் முதல் அரச சேவைகள் ஆணைக்குழு 1946 இல் உருவாக்கப்பட்டது.**

நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையோடும் மேற்கொள்ளப்படும் வினைத்திறன் வாய்ந்த ஒழுக்க ரீதியான அரச சேவையை ஸ்தாபிப்பது அரச சேவைகள் ஆணைக்குழுவின் குறிக்கோளாகும். இலங்கையின் முதல் அரச சேவைகள் ஆணைக்குழு 1946 இல் உருவாக்கப்பட்டது. அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திரமான அரச சேவையை ஸ்தாபித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், காலப் போக்கில் இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. 1972 இன் குடியரசு அரசியல் அமைப்பு அமுலாக்கப்பட்டதன் மூலமே அரசியல் தலையீடுகள் உச்சகட்டத்தை அடைந்தன. சுயாதீனமான நிறுவனமாக

**அரசுக்கு கட்டுப்படாத பல்வேறு கருத்தியலைக் கொண்ட அரச ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். பலரின் பதவி உயர்வுகள் தாமதமாகின. வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். அல்லது பல்வேறு காரணங்களை முன்வைத்து பழிவாங்கப்பட்டனர். இக் காரணங்களினால் சுதந்திரமான ஆணைக்குழுவின் தேவை அதிகரித்தது.**

இருந்த அரச சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டன.

சுதந்திரமான அரச சேவையின் தேவை பற்றிய கலந்துரையாடல் நீண்டகாலமாக நிலவியது. அரசுக்கு கட்டுப்படாத பல்வேறு கருத்தியலைக் கொண்ட அரச ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். பலரின் பதவி உயர்வுகள் தாமதமாகின. வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். அல்லது பல்வேறு காரணங்களை முன்வைத்து பழிவாங்கப்பட்டனர். இக் காரணங்களினால் சுதந்திரமான ஆணைக்குழுவின் தேவை அதிகரித்தது.

இது தொடர்பாக நாட்டின் அறிஞர் குழாம் ஊடகவியலாளர்கள் என்போரின் பங்களிப்புடன் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன. சுதந்திரமான அரச சேவையின்பொருட்டு மிக முக்கியமான கோட்பாடுகளும், நடை முறைகளும் பல்வேறு தரப்பினரால் முன்மொழியப்பட்டன. எவ்வாறாயினும் மிகக் கஷ்டமான முயற்சியின் பின்னர் 2001 இல் அரசியல் அமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தின் மூலம் அரசியல் அமைப்பில் அதுவரை நிலவிய ix அத்தியாயம் நீக்கப்பட்டு புதிய அத்தியாயம் சேர்க்கப்பட்டது.

இத்திருத்தத்திற்கு அமைய புதிய அரச சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். அரசியல் அமைப்பு பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய

ஜனாதிபதி அரச சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்வார். ஒன்பது உறுப்பினர்கள் மத்தியில் இருந்து அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கு அமைய அரச சேவைகள் ஆணைக்குழுவின் தவிசாளரை ஜனாதிபதி நியமனம் செய்வார்.

அரச சேவையின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு என்பன பற்றிய பூரண அதிகாரங்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்ட காரணத் தினால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**அரச சேவையின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு என்பன பற்றிய பூரண அதிகாரங்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்ட காரணத்தினால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.**

இந்த ஆணைக்குழு பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமைய பாராளுமன்றத்திற்கு வகைப் பொறுப்புக் கூறும் கடப்பாடுடைய ஒரு நிறுவனமாக அமைக்கப்பட்டது.

அரசியல் அமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் அங்கீகரிப்பதற்கு இடம்பெற்ற வாக்களிப்பின்போது அரசாங்கக் கட்சியையும். எதிர்கட்சியையும் சார்ந்த சகல மக்கள் பிரதிநிதிகளும் அதற்குச் சார்பாக வாக்களித்தல் இங்கு மிக முக்கியமான திருப்பு முனையாகும். இது இலங்கையின் அரசியல் கலாசாரத்தைப் புதிய செயல்நெறிக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

ஆனால், இது ஆரோக்கியமான முறையில் செயற்படுவதற்கு ஆணைக்குழு உறுப்பினர்களின்

**இதற்கமைய 17 ஆவது திருத்தத்தின் மூலம் சுதந்திரமான அரச சேவையை ஸ்தாபிப்பதற்கு மேற்கொள்ளப்படும் மிக முக்கிய முயற்சி 18 ஆவது திருத்தத்தின் மூலம் புறக்கணிக்கப்பட்டது.**

நியமனத்தில் பல இடையூறுகளும், தடைகளும் ஏற்பட்டன.

2010ஆம் ஆண்டில் 18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் ஆணைக் குழுவை ஸ்தாபித்தலும், கடமைகளிலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசியல் அமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்திற்கு அமைய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியல் அமைப்புப் பேரவையினால் பிரேரிக்கப்படுவதற்குப் பதிலாக 18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் எமது அரசியல் அமைப்பின் 54(1) உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதி நியமிக்கும் ஒன்பது உறுப்பினர்களால் அரச சேவைகள் ஆணைக் குழு உருவாக்கப்பட்டது. இந்த ஒன்பது உறுப்பினர்களில் ஒருவர் ஜனாதிபதியினால் தவிசாளராக நியமிக்கப்படுவார்.

அரசியல் அமைப்பின் 55(1) உறுப்புரைக்கு அமைய அமைச்சரவையினால் அரச உத்தியோகத்தர்களுக்கு உரிய சகல கொள்கைகள் தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய 17 ஆவது திருத்தத்தின் மூலம் சுதந்திரமான அரச சேவையை ஸ்தாபிப்பதற்கு மேற்கொள்ளப்படும் மிக முக்கிய முயற்சி 18 ஆவது திருத்தத்தின் மூலம் புறக்கணிக்கப்பட்டது.

## தேசிய பொலீஸ் ஆணைக்குழு

பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியை கௌரவிப்பதற்கும், பொதுமக்களுக்கான வகைப்பொறுப்பை வெளிப்படுத்தும் குறிக்கோளுடனும் இது அமுலாக்கப்படுகிறது.

அரசியல் அமைப்பின் 18 ஆவது திருத்தத்திற்கு அமைய ஜனாதிபதியினால் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். அரசியல் அமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் 155ஈ உறுப்புரைக்கு அமைய ஒரு நபரால் பொலீஸ் உத்தியோகத்தருக்கு அல்லது பொலீஸ் சேவைக்கு எதிராக பெறப்படும் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளுதல், விசாரணை செய்தல், பாராளுமன்றத்தின்மூலம் செயல்வலுவாக்கம் செய்யப்பட்ட குறிப்பிட்ட சட்டத்திற்கு அமைய நிவாரணங்களை வழங்குதல் என்பன பொலீஸ் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரங்கள் ஆகும்.

**பொலீஸ் உத்தியோகத்தர் களுக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியை கௌரவிப்பதற்கும், பொதுமக்களுக்கான வகைப்பொறுப்பை வெளிப்படுத்தும் குறிக்கோளுடனும் இது அமுலாக்கப்படுகிறது.**

**ஆனால் அரசியல் அமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு அமைய பொலீஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனம் செய்வார். இந்நியமனங்கள் அரசியல் அமைப்பின் பேரவையின் பரிந்துரைக்கமைய மேற்கொள்ளப்படும்.**

ஆனால் அரசியல் அமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு அமைய பொலீஸ் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனம் செய்வார். இந்நியமனங்கள் அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய மேற்கொள்ளப்படும். அரசியல் அமைப்பின் 17 ஆவது திருத்தத்தின்மூலம் தேசிய பொலீஸ் ஆணைக்குழு உருவாக்கப்படுவதன் ஊடாக அரசியல் தலையீடுகளில் இருந்து விடுவிக்கப்பட்ட சுயாதீனமான அரச சேவையை உருவாக்குவதே எதிர்பார்க்கப்பட்டது. அரசியல் அமைப்பு பேரவையின் மூலம் ஆணைக்குழு உறுப்பினர்களைப் பரிந்துரை செய்வதன் ஊடாக இதுவே எதிர்பார்க்கப்பட்டது. அரசியல் தலையீடுகளுக்கு அடிபணியாத, குடிமக்களைக் கைது செய்யும்போது எல்லையற்ற அதிகாரத்தைப்பயன்படுத்துதல், சந்தேக நபர்களைக் கைது செய்யும் போது துன்புறுத்தல்களுக்கும், இம்சைகளுக்கும் ஆளாதல், உயிரிழத்தல், பொலீசார் இலஞ்சம் வாங்குதல் ஆகிய நீண்டகாலமாக பொலீஸ் திணைக்களத்திற்கு எதிரான பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து இருந்து வரும் நிலையிலேயே 17 ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீனமான பொலீஸ் சேவை நிறுவுவது பற்றிய எதிர்பார்ப்புக்கள் உருவாகின.

ஆனால் 18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் மேற்படி எதிர்பார்ப்புக்கள் சிதறுண்டன.

## இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு



1996 இன் 21 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இது சுயாதீனமான ஒரு நிறுவனமாகும்.

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் உறுப்பு நாடாகும். எனவே, இலங்கை அனேகமான சர்வதேச சமவாயங்களில் கையொப்பமிட்டுள்ளது. இச் சமவாயங் களுக்கு அமைய செயற்படுவதற்கு இலங்கை கடப்பாடு கொண்டுள்ளது.

ஆகவே, 1996 இன் 21 ஆம் இலக்க சட்டத்தின்மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இது சுயாதீனமான ஒரு நிறுவனமாகும். அரசியல் அமைப்பின் ஊடாக உறுதி செய்யப்பட்ட சகல பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு தேசிய சட்ட வழிமுறையை சர்வதேச சமவாயங்களுக்கு அமைவாக கலந்துரையாடுவதற்கு அரசுக்கு வழிகாட்டுவதற்காகவே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

அதேசமயம் மனித உரிமைகள் பற்றிய அறிவை பிரஜைகள் மத்தியில் பிரசாரம் செய்வதும் அதன் பொறுப்பாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

**மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு சவாலாக அமையாத கீழ்ப்படிவுள்ள ஒரு நிறுவனமாக பொது மக்கள் மத்தியில் ஓர் நம்பிக்கையீனம் இருந்து வருகிறது.**

உறுப்பினர்களின் தொகை ஐந்தாகும். மனித உரிமைகள் என்னும் விடயப் பொருள் பற்றிய அறிவும் அனுபவமும் உடையோர் மத்தியில் இருந்து மேற்படி ஐந்து உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய ஜனாதிபதி இந் நியமனங்களை மேற்கொள்வார். இவ் உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தவிசாளர் பதவிக்கான ஒருவர் ஜனாதிபதியினால் நியமனம் பெறுவார். மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுக் காலமாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு பற்றி பொதுமக்கள் மத்தியில் அவ்வளவு திருப்தி காணப்படவில்லை. அதற்கான காரணங்கள் பின்வருமாறு.

1. சமர்ப்பிக்கப்படும் விசாரணைகளை மேற்கொள்வதில் ஏற்படும் காலதாம தங்கள். சில முறைப்பாடுகள் பற்றி எதுவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

2. மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு சவாலாக அமையாத கீழ்ப்படிவுள்ள ஒரு நிறுவனமாக பொதுமக்கள் மத்தியில் ஓர் நம்பிக்கையீனம் இருந்து வருகிறது.

3. ஆணைக்குழுவின் வகைப்பொறுப்பும் கடமைகளும் உரிய முறையில் செயற்படுவதாக தோன்றாமை.

## ஒம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி – பாராளுமன்ற ஆணையாளர்)

பிரஜைகளின் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு பொறிமுறைகளில் ஒன்று நிர்வாகத்திற்குப் பொறுப்பான பாராளுமன்ற ஆணையாளர். (ஒம்புட்ஸ்மன் - குறைகேள் அதிகாரி) என்ற பதவியாகும். மற்றைய பொறிமுறை உயர்நீதிமன்றத்தின்மூலம் அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரமாகும்.

**பிரஜைகளின் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு பொறிமுறைகளில் ஒன்று நிர்வாகத்திற்குப் பொறுப்பான பாராளுமன்ற ஆணையாளர். (ஒம்புட்ஸ்மன் – குறைகேள் அதிகாரி) என்ற பதவியாகும்.**

ஒம்புட்ஸ்மன் என்பது பக்கச் சார்பற்ற விசாரணையாகும். இலங்கை அரசியல் அமைப்பின் 156(2) பின்வருமாறு குறிப்பிடுகிறது. அரசாங்க அலுவலர்கள், பகிரங்க கூட்டுத்தாபன அலுவலர்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலர்கள் அதையொத்த வேறு நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறி உள்ளார்கள் என்றும், வேறு அநீதிகளை இழைத்து விட்டார்கள் என்றும் கூறுகின்ற முறைப்பாடுகள் அல்லது

**ஓம்புட்ஸ்மன் தனக்குக் கிடைக்கும் தகவல்கள் தொடர்பாக அவற்றின் இரகசியத் தன்மையைப் பேண வேண்டும். அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் வேறு நியாயமற்ற நடவடிக்கைகள் பற்றிய முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது அவருடைய கடமையாகும்.**

சார்த்தல்கள் பற்றி அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும், அவற்றுக்கு அமைவாகவும் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாக உள்ளவாறான நிறுவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) என்ற பதவியினை தாபிப்பதற்காக சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஓம்புட்ஸ்மன் தனக்குக் கிடைக்கும் தகவல்கள் தொடர்பாக அவற்றின் இரகசியத் தன்மையைப் பேண வேண்டும். அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் வேறு நியாயமற்ற நடவடிக்கைகள் பற்றிய முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது அவருடைய கடமையாகும்.

ஆனால் ஓம்புட்ஸ்மனுக்கு நீதிமன்ற அதிகாரங்கள் கிடையாது. எனவே, அரச ஊழியர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்புடைய முறைப் பாடுகள் பற்றி அவர் விசாரணை செய்ய முடியாது.

1981 ஆம் ஆண்டின் சட்டத்தின் 11(ஆ) வாசகத்திற்கு அமைய ஓம்புட்ஸ்மனின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும். ஓம்புட்ஸ்மனுக்கு நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியாது. ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் ஊடாக அதனைச் செய்ய வேண்டும். பொதுமக்கள் நேரடியாகவே ஓம்புட்ஸ்மனுக்கு

முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியாமை ஓர் குறைபாடாகும். எனினும், சில நாடுகளில் நேரடியாகவே பொதுமக்கள் அணுகக் கூடியவாறே ஒம்புட்ஸ்மன் பதவி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

**1981 ஆம் ஆண்டின் சட்டத்தின் 11(ஆ) வாசகத்திற்கு அமைய ஒம்புட்ஸ்மனின் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும். ஒம்புட்ஸ்மனுக்கு நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியாது.**

ஆனால், 1994 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு அமைய ஒம்புட்ஸ்மனிடம் முறைபாடுகளைச் சமர்ப்பிக்கக் கூடிய வழிமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் தனதுதீர்ப்புக்களையும்,மேற்படிதீர்ப்புக்களை மேற்கொண்டமைக்கான காரணங்களையும், அவ்வாறு அறிக்கையிடுவதற்கான பரிந்துரைகளைப் பொதுமக்கள் மனுக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு மாத்திரமே ஒம்புட்ஸ்மனுக்கு அதிகாரம் இருந்தது. இப் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின்னர் எடுக்க நடவடிக்கைகளைப் பற்றி பொதுமக்கள் மனுக்குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

1994 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு அமைய ஒம்புட்ஸ்மன் தனது தீர்வுகளையும், மேற்படி தீர்வுகளை மேற்கொண்டமைக்கான காரணிகளையும் குறிப்பிட்ட நிறுவனத்தின் முதல்வருக்கும், குறிப்பிட்ட நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும், பொதுமக்கள் மனுக்குழுவிற்கும் அறிக்கையிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு அமைய ஒம்புட்ஸ்மன் தனது தீர்வுகளையும், மேற்படி தீர்வுகளை மேற்கொள்வதற்கான காரணிகளையும் அந்த நிறுவனத்திற்கு

**1994 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு அமைய ஒம்புட்ஸ்மன் தனது தீர்வுகளையும், மேற்படி தீர்வுகளை மேற்கொள்வதற்கான காரணிகளையும் அந்த நிறுவனத்திற்கு உரிய அமைச்சருக்கும், பொதுமக்கள் மனுக்குழுவிற்கும் அறிக்கையிடுவதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

உரிய அமைச்சருக்கும், பொதுமக்கள் மனுக்குழுவிற்கும் அறிக்கையிடுவதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட கால எல்லையுள் தகுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் குறிப்பிட்ட நிறுவனத்தின் முதல்வர் அதுபற்றி தனது அவதானிப்புக்களைச் சமர்ப்பித்து சில அவதானிப்புக்களை ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்திற்கும் அறிக்கையிட வேண்டும்.

ஒம்புட்ஸ்மன் சமர்ப்பித்த அறிக்கை பற்றி அவரை நீதிமன்றத்திற்கு அழைக்க முடியாது. அது விடயமாக அவருக்கு எதிராக வழக்குத் தொடரவும் முடியாது.

## குறைபாடுகள்

1. ஒம்புட்ஸ்மனின் தாக்கம் குறைதல்.
2. அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பகுதி ஒம்புட்ஸ்மனின் விடயப் பொருளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளமை.

உதாரணம் அமைச்சர்கள், நீதித்துறை அதிகாரிகள், அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள், பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் அவரது பணிக்குழுவினரும்.

3. போதியளவு வளங்கல் இல்லாமை.
4. ஒம்புட்ஸ்மனை நேரடியாக அணுக முடியாமை

## பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள்

சட்டவாக்கத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள சுமைகளை இலகுபடுத்தும் உபாய மார்க்கமாக பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களைக் குறிப்பிட முடியும். தெரிவுக் குழுக்களை அமைக்கும் அதிகாரம் அரசியல் அமைப்பின் 74 வது உறுப்புரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் பாராளுமன்ற ஜன நாயகத்தைப் பயனுறுதிவாய்ந்த வகையில் செயற்படுத்துவதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் பங்களிப்புச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது ஒழுங்குவிதிகளின் கீழ் அமுலாக்கப்படும் ஒன்பது குழுக்கள் பாராளு மன்றத்தில் செயற்படுகின்றன. பொதுமக்கள் மனுக்குழு அதில் ஒன்றாகும்.

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 128 இன் கீழ் ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதி நிதித்துவத்துடன் பொதுமக்கள் மனுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 128 இன் கீழ் ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதி நிதித்துவத்துடன் பொதுமக்கள் மனுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.**

**மனுக்குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்றக் குழுவில் இருந்து தவிசாளர் தேர்ந்தெடுக்கப் படுவார். மனுக்குழுவின் செயற்பாடு தவிசாளரின் ஆளுமை, அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்திற்கு அமையவே தீர்மானிக்கப்படும்.**

ஒரு மனு சமர்ப்பிக்கப்படும் போது பூரணத்துவம் செய்யவேண்டிய நிபந்தனைகள் 25(அ) பாராளுமன்றக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்படுகிறது. 1981 ஆம் ஆண்டில் இச் சட்டம் பொதுமக்களின் மனுக்களை சபாநாயகருக்கு அனுப்பக் கூடிய வகையில் திருத்தப்பட்டுள்ளது.

1981இன் சட்டத்திற்கு அமைய பொது மக்களின் மனுக்கள் தொடர்பாகத் தமது தீர்வுகளையும், நிவாரணங்களையும் பொது மக்கள் மனுக்குழுவிற்கு பரிந்துரைகள் செய்யப்படும்.

1994 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு அமைய மேற்படி தீர்வுகளையும், பரிந்துரைகளையும் பொதுமக்கள் மனுக்குழுவிற்கு மேலதிகமாகக் குறிப்பிட்ட நிறுவனத்தின் முதல்வருக்கும், அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இதற்கமைய நிவாரணங்களை வழங்கு வதற்கு 1994 ஆம் ஆண்டுவரை பொதுமக்கள் மனுக்குழுவிற்கு இருந்த தற்றுணிவு மாறுபாடடைந்தது.

மனுக்குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்றக் குழுவில் இருந்து தவிசாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். மனுக்குழுவின் செயற்பாடு தவிசாளரின் ஆளுமை, அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்திற்கு அமையவே தீர்மானிக்கப்படும்.

செயற்பாடு கொண்ட உறுப்பினர் குழாம் இருப்பதன் காரணமாக குறிப்பிட்டவாறு ஒன்றுகூடி கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.



## சட்டவாக்க ஏற்பாடுகள்

பொதுமக்களின் மனுக்கள் பற்றிய குழு

1. தெரிவுக்குழு பெயர் குறிப்பிடும் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களால், பொதுமக்கள் மனுக்குழுவிற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

2. நிலையியற் கட்டளைச் சட்டத்தின் வாசகம் 25 அ (10) ஏற்பாடுகளின்கீழ் மனுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மனுக்களை கவனிப்பது இக்குழுவின் கடமையாகும்.

3. ஒரு மனுவினால், அரச அதிகாரி ஒருவர் அல்லது அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது சமமான வேறு நிறுவனத்தின் அதிகாரி ஒருவரால் அல்லது அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பாகவோ அல்லது வேறு அநீதி ஏற்பட்டதாகவோ தோற்றுகிறது என மேற்படி மனுக்குழு கருதும் பட்சத்தில் அதுபற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கு மேற்படி மனு, அம் மனுக்குழுவினால் பாராளுமன்ற ஆணையாளருக்கு

**பொதுமக்கள் மனுக்குழுவின் கட்டமைப்பு மாகாண சபைகளிலும் உண்டு. பாராளுமன்றத்தில் இது தொடர்பாக அமைந்துள்ள ஏற்பாடுகளே இங்கு செயற்படும். பொதுமக்கள் மனுக்குழு பற்றிய பரிந்துரைகளை ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிப்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அவை சமர்ப்பிக்கப் படுகின்றன.**

(ஒம்புட்ஸ்மனுக்கு) அனுப்பி வைக்க முடியும்.

4. மனுக்குழு, பாராளுமன்ற விவகாரம் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மனுக்கு) அனுப்பப்பட்ட ஓர் மனு தொடர்பாக அவரால் மனுவிற்கு சமர்ப்பித்த அறிக்கையை மனுக்குழுவினால் பரிசீலனை செய்த பின்னர், அவ் அறிக்கை தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய தனது கருத்தை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டும்.

5. மனுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீதான கருத்துக்களையும், மேற்படி மனு தொடர்பாகப் பரிந்துரைக்க வேண்டுமென தாம் கருதும் ஏற்புடைய வேறு கருத்துக்களுடன் காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டும்.

6. மனுக்குழுவிற்கு அவசியம் என உணரும் பட்சத்தில் தம்மால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு மனுவை அல்லது அறிக்கையை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்தல்.

பொதுமக்கள் மனுக்குழுவின் கட்டமைப்பு மாகாண சபைகளிலும் உண்டு. பாராளுமன்றத்தில் இது தொடர்பாக அமைந்துள்ள ஏற்பாடுகளே இங்கு செயற்படும். பொதுமக்கள் மனுக்குழு பற்றிய பரிந்துரைகளை ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிப்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அவை சமர்ப்பிக்கப்படுகின்றன.

**நவீன உலகத்தில் பிரஜைகளையும், சமூகத்தையும் ஜனநாயக ஆட்சிமுறையில் ஒன்றிணைக்கும் பண்பாகவே அரச நிறுவன முதல்வர்களினதும், பிரஜைகளினதும் பங்கு பற்றலுடன் பிரஜைகளின் விஞ்ஞாபனங்கள் தயாரிக்கப்படுகின்றன.**

## பிரஜைகளின் விஞ்ஞாபனங்கள்

நவீன உலகத்தில் பிரஜைகளையும், சமூகத்தையும் ஜனநாயக ஆட்சிமுறையில் ஒன்றிணைக்கும் பண்பாகவே அரச நிறுவன முதல்வர்களினதும், பிரஜைகளினதும் பங்கு பற்றலுடன் பிரஜைகளின் விஞ்ஞாபனங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பிரஜைகளின் விஞ்ஞாபனம் மூலம் குறிப்பிட்ட நிறுவனக் கட்டமைப்பு, அதன்மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் மேற்படி சேவைகளைப் பெறும் முறை என்பன சரளமாக விளக்கப்பட்டுள்ளன. பிரஜைகள் குறிப்பிட்ட அரச நிறுவனங்களின் சேவைகளைத் துரிதமாகப் பெறக்கூடிய வகையில் இவ் வழிமுறை உருவாக்கப்பட்டது.

பிரஜைகளின் விஞ்ஞாபனத்தைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் பிரஜைகள் காணக் கூடிய வகையில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**பொது நிருவாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய பிரஜைகள் விஞ்ஞாபன முறை நிர்வாக நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது.**

பிரஜைகள் விஞ்ஞாபனம் மோசடிகளுக்கும், இலஞ்சத்திற்கும் தடை விதிக்கிறது. தகவல்களை இலகுவாகப் பெறமுடியாத சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்கும் போக்கு உருவாகிறது.

பொது நிருவாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய பிரஜைகள் விஞ்ஞாபன முறை நிர்வாக நிறுவனங்களின் வினைத் திறனை மேம்படுத்துவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆனால் தற்போது அனேக அரச நிறுவனங்களில் நல்லாட்சி வீழ்ச்சியடைந்து அரசியல் தாக்கங்கள் ஏற்படுவதன்மூலம் அரச நிருவாகமும் குறிப்பிட்ட அளவு வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

## பிரதேசச் செயலகம்



பொதுமக்களுக்கு மிகவும் சமீபமான அரச அலுவலகம் பிரதேசச் செயலகம் என்பதில் எதுவித விவாதமும் கிடையாது. அதனால் மேற்கொள்ளப்படும் பரந்துபட்ட கடமைகளே அதற்குக் காரணமாகும்.

**பொதுமக்களுக்கு மிகவும் சமீபமான அரச அலுவலகம் பிரதேசச் செயலகம் என்பதில் எதுவித விவாதமும் கிடையாது. அதனால் மேற்கொள்ளப்படும் பரந்துபட்ட கடமைகளே அதற்குக் காரணமாகும்.**

காலனித்துவ ஆட்சியாளர்கள் Public Service என்ற பெயரில் பொதுமக்கள் சேவையை ஆரம்பித்ததாகவும் அது அரச சேவையென தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதன் மூலம், அரச நிறுவனங்கள் மற்றும் அரச சேவைகள் என அங்கீகரிக்கப்பட்டதாகவும் பிரபலமான நிறுவாக சேவை அதிகாரியான விஜய விக்கிரமரத்ன குறிப்பிட்டுள்ளார். பிரதேசச் செயலகம் ஒரு பிரஜையின் பிறப்பு முதல் இறப்பு வரையில் அனைத்து பிரஜைகளுக்கும் பல முக்கிய சேவைகளை செய்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் மேற்படி சேவைகளை வழங்கும் அதிகாரிகள் சில சமயங்களில் பொதுமக்களைப் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்படுத்தும் நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

**சேவைகளுக்கு ஏற்புடைய சட்டதிட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் காலவரையறைகள் பற்றி பிரஜைகளுக்குச் சரியான விளக்கமின்மையே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக சேவைகளைப் பெறுவதற்கு இடைத் தரகர்களின் உதவியை நாடவேண்டிய ஒரு போக்கு காணப்படுகிறது.**

தான் பெறும் சேவைகளுக்கு ஏற்புடைய சட்டதிட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் காலவரையறைகள் பற்றி பிரஜைகளுக்குச் சரியான விளக்கமின்மையே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக சேவைகளைப் பெறுவதற்கு இடைத் தரகர்களின் உதவியை நாடவேண்டிய ஒரு போக்கு காணப்படுகிறது.

## பெறக்கூடிய சேவைகள்

- பிறப்புச் சான்றிதழ் பிரதிகள்
- திருமணச் சான்றிதழ் பிரதிகள்
- மரணச் சான்றிதழ் பிரதிகள்
- தேசிய அடையாள அட்டைகள்
- உத்தரவுப் பத்திரங்கள்
- ஓய்வூதியம்
- சான்றிதழ்கள்
- நிவாரணங்கள்
- காணி தொடர்பான கருமங்கள்
- வயோதிபர், சிறுவர் நலன்புரி சேவைகள்

பிறப்பு, திருமண மற்றும் மரணச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதாயின் மேற்படி சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசச் செயலகங்களில் இருந்து மாத்திரமே அத் தகவல்களைப் பெற முடியும்.

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதாயின் கிராமத்தில் வாழுபவர் தமது கிராம அலுவலரிடமிருந்தும், பெருந்தோட்டமாயின் தோட்டக் கண்காணிப்பாளரிடம் இருந்தும், பாடசாலையாயின் பாடசாலை அதிபரிடம்

இருந்தும் மாத்திரமே பெற முடியும்.

பிரதேசச் செயலகத்தில் இருந்து பெறக் கூடிய உத்தரவுப் பத்திரங்கள் பின்வருமாறு

- வாகனங்களுக்கான வருமான உத்தரவுப் பத்திரம்
- ஒரு கற்குழியைப் பராமரிப்பதற்கான உத்தரவுப் பத்திரம்.
- மணல் தோண்டுவதற்கான உத்தரவுப் பத்திரம்.
- வாகன சாரதிகளின் உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை நீடித்தல்.
- விசேட கடவுச் சீட்டுக்கள்.
- தொழில் முயற்சிகளின் பெயர்களைப் பதிவு செய்தல்.
- விலங்குகளைப் போக்குவரத்துச் செய்யும் உத்தரவுப் பத்திரம்.
- மது விற்பனைச்சாலைகளின் பதிவை ஆண்டுதோறும் புதுப்பித்தல்.

ஓய்வூதியம் மற்றும் விதவைகள் / விதுரன் ஓய்வூதியச் சம்பளம் பெறுவதற்கு சரியான முறையில் பூர்த்தி செய்த ஆவணங்களைப் பிரதேசச் செயலகத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

வருமானச் சான்றிதழ், பெறுமதிச் சான்றிதழ், நற்சான்றிதழ் மற்றும் முறைப்பாடுகளின் பிரதிகள் என்பவற்றை பிரதேசச் செயலகத்தில் இருந்து பெறமுடியும்.

**தேசிய அடையாள அட்டையைப் பெறுவதாயின் கிராமத்தில் வாழுபவர் தமது கிராம அலுவலரிடமிருந்தும் பெருந்தோட்டமாயின் தோட்டக் கண்காணிப் பாளரிடம் இருந்தும், பாடசாலையாயின் பாடசாலை அதிபரிடம் இருந்தும் மாத்திரமே பெற முடியும்.**

**காணி சம்பந்தமாக பரந்துபட்ட சேவைகளைப் பிரதேசச் செயலகம் வழங்குகிறது.**

## பிரதேசச் செயலகத்தில் இருந்து பெறக் கூடிய நிவாரணங்கள்

நோய்களுக்கான உதவி, பொது மக்களுக்கான உதவி (புண்ணிய சம்பளம்), வலது குறைந்தோருக்கு உபகரணங்கள், புனர்வாழ்வு உதவி, சமயாசமய நிவாரணங்கள், வலது குறைந்தோருக்கு வழங்கப்படும் வீட்டு வசதி உதவிகள், வயோதிபருக்கும் சிறுவர்களுக்கும், வலது குறைந்தோருக்கும் வழங்கப்படும் உதவிகள் விஸ்தீரணமான இடர் உதவிகள், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியச் சம்பளம், அரச சார்பற்ற / தொண்டர் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

காணி சம்பந்தமாக பரந்துபட்ட சேவைகளைப் பிரதேசச் செயலகம் வழங்குகிறது.

- புதிதாக அரச காணியைப் பெறுதல்
- சீவிய உரித்தைப் பெறுதல்
- மூல உரித்தைப் பெறுதல்
- முன் அனுமதியின்றி அபிவிருத்தி செய்த காணிக்கான உத்தரவுப் பத்திரத்தைப் பெறல்.
- எல்எல் உத்தரவுப் பத்திரத்தை “ரன் பிம” கொடுப்பனவு பத்திரமாக மாற்றம் செய்தல்.
- உத்தரவுப் பத்திரத்தின் அல்லது உறுதியின் பின் உரிமை சம்பந்தமாகப் பெயர் குறிப்பிடல்.
- சுவர்ண பூமி, ஜயபூமி அல்லது ரன் பிம உறுதிப் பத்திரங்களைப் பிணையாக

வைத்து கடனைப் பெறுதல்.

- காணி உரித்து தொடர்பான பிரச்சினை களுக்கு தீர்வு காணுதல்.
- ஆண்டுதோறும் வரிசெலுத்தும் காணிகள் பற்றிய உரிமை.
- அரசு சுவீகரித்த காணிக்கு கட்டிடத்திற்கு நஷ்டஈடு வழங்குதல்.

**மரங்களைப் பேணுதல் தொடர்பான கடமைகளின்கீழ், மரங்களைத் தறித்தல், தறித்த மரங்களைப் போக்குவரத்துச் செய்தல் என்பவற்றிற்கான உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல். மரங்களைத் தறிப்பதற்காக உத்தரவுப் பத்திரங்களை விநியோகிக்கும் போது காணியின் இயல்பு, மரங்களின் அளவு, மரங்களின் வகை என்பன கருத்தில் கொள்ளப்படும்.**

மரங்களைப் பேணுதல் தொடர்பான கடமைகளின்கீழ், மரங்களைத் தறித்தல், தறித்த மரங்களைப் போக்குவரத்துச் செய்தல் என்பவற்றிற்கான உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல். மரங்களைத் தறிப்பதற்காக உத்தரவுப் பத்திரங்களை விநியோகிக்கும்போது காணியின் இயல்பு, மரங்களின் அளவு, மரங்களின் வகை என்பன கருத்தில் கொள்ளப்படும்.

பிரதேசச் செயலகப் பிரிவில் வசிக்கும் நிரந்தர வீடற்ற முதியோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பிவைத்தல். வலது குறைந்த பிள்ளைகளை உரிய சிறுவர் இல்லங்களுக்கு அனுப்பி வைத்தல். சிரேஷ்ட பிரஜைகளின் நலன்புரி, முதியோரைப் பேணிப் பாதுகாப்பதற்கான அறிவூட்டல் போன்ற சேவைகள் நலன்புரிச் சேவைகளின்கீழ் அமுல்படுத்தப்படும்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்ட சேவை நிலையங்களைப் பராமரித்தலும், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதலும் நலன்புரிச் சேவைகளின் கீழ் உள்ளடக்கப்படும்.

**அதிகாரப் பகிர்வு பன்முகப்படுத்தல் மற்றும் பங்கேற்பு நிர்வாக முறையை மேம்படுத்துதல் மூலம் இலங்கையில் சமசீர் நிலையான நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை ஸ்தாபிக்கையில் முன்னணிப் பாத்திரம் வகிப்பது இவ் அமைச்சின் கடமையாகும்.**

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அதிகாரப் பகிர்வு பன்முகப்படுத்தல் மற்றும் பங்கேற்பு நிர்வாக முறையை மேம்படுத்துதல் மூலம் இலங்கையில் சமசீர் நிலையான நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை ஸ்தாபிக்கையில் முன்னணிப் பாத்திரம் வகிப்பது இவ் அமைச்சின் கடமையாகும்.

அமைச்சின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

1. மத்திய அரசுக்கும், மாகாண சபை களுக்குமிடையே சிறந்த கூட்டிணைப்பு
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் பற்றிய தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கு உதவி செய்தல்
3. தேசிய கொள்கைச் சட்டகத்திற்குள் வினைத்திறனுடன் செயற்படுதல். மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் உதவுதல்.
4. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிதி, தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குதல்.

5. மாகாண சபைகள் மற்றுமஉள்ளூராட்சி நிறுவனங்களின் மட்டத்தில் செயற்படுத்தக்கூடிய பன்முகப்படுத்தல், பயனுறுதி என்பவற்றை மேம்படுத்துவதற்கான மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தல்.

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் நடவடிக்கைகள் பற்றி சர்வதேச உறவுகளை உறுதிப்படுத்தல்.**

6. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் நடவடிக்கைகள் பற்றி சர்வதேச உறவுகளை உறுதிப்படுத்தல்.

7. வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை அமுலாக்கும் நிறைவேற்று மற்றும் கூட்டிணைப்பு நிறுவனங்களாகச் செயற்படுதல்.

8. உள்ளூராட்சி நிறுவனங்களின் பௌதீக, பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.

**தவறற்ற கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு வழங்கி நல்லாட்சியை வலுவூட்டுவதற்காக பங்களிப்புச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டே கணக்காய்வுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது.**

## கணக்காய்வுத் திணைக்களம்

தவறற்ற கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு வழங்கி நல்லாட்சியை வலுவூட்டுவதற்காக பங்களிப்புச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டே கணக்காய்வுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது.

கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் பின்வருமாறு:

அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், நீதிச் சேவை ஆணைக்குழு அலுவலகம், அரச சேவைகள் ஆணைக்குழு அலுவலகம், நிர்வாக நடவடிக்கைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம், தேர்தல் ஆணையாளர் அலுவலகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், எழுத்துமூலம் சட்டரீதியாக அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள தொழில் முயற்சிகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் என்பனவாகும். இலங்கை அரசியல் அமைப்பிற்கு வகைபொறுப்புக் கூறவேண்டிய ஒரு பதவியாக கணக்காய்வாளர் நாயகம் 1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் அமைப்பின் மூலமும், 1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் அமைப்பின் மூலமும் உள்ளடக்கப்பட்டார்

எனவே கணக்காய்வாளர் நாயகம் பாரிய விடயப் பரப்பிற்கு வகைபொறுப்புக் கூறவேண்டிய அதிகாரியாவார்.

எனினும் இலங்கையின் கணக்காய்வாளர் நாயகத்தின் விடயப் பரப்பு பரந்துபட்ட ஒன்றாக அமைந்தாலும் கணக்காய்வாளர் நாயகத்தின் செயற்பாடு அர்த்தமுள்ளதாக அமைவதற்கு பல தடைகள் உண்டு. காரணம் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகளில் ஒப்படைக்கப்படும் பாரதூரமான நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக முன்னைநாள் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சீ. மாயதுன்ன அவர்கள் கடமையில் ஈடுபட்ட காலகட்டத்தில் கணக்காய்வாளர் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டப்பட்டது. பல அரச நிறுவனங்களின் நிதி ஒழுங்கீனங்கள் அம்பலத்திற்கு வந்தன. எனினும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிதி ஒழுங்கீனங்களை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. உள்ளூராட்சி அதிகார சபைகளினதும் பல்கலைக்கழகங்களினதும் மோசடிகள் தொடர்பாக மிகைவிதிப்பு (Surcharge) விதிக்கும் அதிகாரம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு உண்டு. இத் திணைக்களத்தின்கீழ் பிராந்திய மட்டத்திலும் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு பொதுமக்களின் முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

**எனினும் இலங்கையின் கணக்காய்வாளர் நாயகத்தின் விடயப் பரப்பு பரந்துபட்ட ஒன்றாக அமைந்தாலும் கணக்காய்வாளர் நாயகத்தின் செயற்பாடு அர்த்தமுள்ளதாக அமைவதற்கு பல தடைகள் உண்டு.**

**இலஞ்ச ஊழல் சட்டம் 1954 இல் சட்டமாக்கப்பட்ட பின்னர் 1958 ஆம் ஆண்டில் இலஞ்ச திணைக்களம் நீதி அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது.**

## இலஞ்சம் மற்றும் ஊழல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

இலஞ்ச ஊழல் சட்டம் 1954 இல் சட்டமாக்கப்பட்ட பின்னர் 1958 ஆம் ஆண்டில் இலஞ்சத் திணைக்களம் நீதி அமைச்சின்கீழ் உருவாக்கப்பட்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கு இலஞ்சச் சட்டம் மற்றும் தேசிய அரசப் பேரவையின் 1975 இன் முதலாம் இலக்க சொத்துக்கள் வரவுகள் பிரகடனச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பான வழக்குத் தொடருமாறு கட்டளையிடுவதற்கு இந்த நிரந்தர ஆணைக்குழு 1994 இன் 19 ஆம் இலக்கச் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டது. முதலாவது ஆணைக்குழு 1994 டிசெம்பர் 15 ஆந் திகதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்று. இவர்களில் இருவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்கள். அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக இருத்தல் வேண்டும். ஒரு

உறுப்பினர் குற்றப் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கம் தொடர்பாக அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களைப் பொறுப்பேற்பதும் அது தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வழக்குத் தொடர்தல் மற்றும் வழக்குகளை நெறிப்படுத்தல் என்பன ஆணைக்குழுவின் கடமைகளாகும். எந்தவொரு நபரையும் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுப்பதற்கும் அந் நபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யவும், விசாரணை முடியும்வரை கடவுச் சீட்டுக்களை இடைநிறுத்தவும், சொத்துக்களின் உரித்துரிமையை மாற்றி பதிவு செய்வதை தடுப்பதற்கும் குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படுமாயின் வழக்குத் தொடர்வதற்கும், அவ்வழக்கை நெறிப்படுத்துவதற்கும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களைப் பொறுப்பேற்பதும் அது தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வழக்குத் தொடர்தல் மற்றும் வழக்குகளை நெறிப்படுத்தல் என்பன ஆணைக்குழுவின் கடமைகளாகும்.**

எனினும் முறைப்பாடு இன்றி குற்றச் சாட்டுக்களை ஆய்வுசெய்யும் ஆற்றல் ஆணைக்குழுவிற்கு இல்லை.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஆணைக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றி பொதுமக்கள் மத்தியில் அவ்வளவு நல்ல அபிப்பிராயம் கிடையாது.

கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் சுறா மீன்களைத் தப்பி ஓடவிட்டு சிறு மீன்களாகிய நெத்தலிகளுக்கு எதிராக மாத்திரம் குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதாகப் பொதுமக்கள் மத்தியில் இருந்து பாதகமான கருத்துக்கள் வெளிவருகின்றன. அரசின் உயர்பதவி வகிக்கும் அமைச்சர்களுக்கும், நிறுவனத் தலைவர்களுக்கும் எதிராக ஆணைக்குழு பெற்ற முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்து நிறைவு செய்ததாகக் காணோம்.

## நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு



இந்த ஆணைக்குழுவில் பிரதம நீதியரசரும் அரசியல் அமைப்பின் 41(இ) உறுப்புரையின்கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இருவரும் உள்ளடக்கப்படுவர். பிரதம நீதியரசர் நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக கடமையாற்றுவார்.

**இந்த ஆணைக்குழுவில் பிரதம நீதியரசரும் அரசியல் அமைப்பின் 41(இ) உறுப்புரையின்கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இருவரும் உள்ளடக்கப்படுவர். பிரதம நீதியரசர் நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக கடமையாற்றுவார்.**

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பான அதிகாரம் இந்த ஆணைக் குழுவிற்கு உண்டு. நீதித்துறை அதிகாரிகளும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் அரச அதிகாரிகளினதும் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவையில் இருந்து நீக்கப்படுதல் ஆகிய அனைத்து அதிகாரங்களும் இவ் ஆணைக்குழுவிற்கு உண்டு.

நீதி நிர்வாகச் சட்டத்தின்கீழ் அவசியமான உட்கட்டமைப்பு சேவைகளை வழங்குதல், நீதிபதிகளின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் நீதித்துறை பதவிநிலை,

**எனினும், பிரதம நீதியரசர் சரத் நந்தசில்வா அவர்களின் பதவிக் காலத்தின்போது நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. நீதித்துறையின் சுதந்திரம் பற்றி பொதுமக்களின் நம்பிக்கை ஆட்டம் கண்டது.**

அதிகாரிகள் மற்றும் உதவி பணிக்குழுவினர் தவறற்ற முறையில் மனிதவளங்களை முகாமைத்துவம் செய்வதன்மூலம் சகல பிரஜைகளுக்கும் சட்டத்தின் பாதுகாப்பைத் துரிதமாகவும், சமத்துவமாகவும் வழங்குவது ஆணைக்குழுவின் குறிக்கோளாகும்.

எனினும், பிரதம நீதியரசர் சரத் நந்தசில்வா அவர்களின் பதவிக் காலத்தின்போது நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. நீதித்துறையின் சுதந்திரம் பற்றி பொதுமக்களின் நம்பிக்கை ஆட்டம் கண்டது.

## தேர்தல் திணைக்களம்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துவதற்கும், பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கமாக அமைதல் வேண்டுமென அரசியல் அமைப்புக்கான 11 வது திருத்தத்தின் 103(2) உறுப்புரை கூறுகிறது.

103(1) உறுப்புரை பின்வருமாறு கூறுகிறது:

ஆணைக்குழு உயர்தொழிலில் அல்லது நிருவாக அல்லது கல்வித் துறைகளில் தமக்கென சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட ஆட்களிடையே இருந்து, அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரையின் மீது, ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரையின்மீது ஜனாதிபதி உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

சுதந்திரமான தேர்தல்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டமை தொடர்பாக நீண்டகாலமாக நிலவிய கலந்துரையாடலின் காரணமாகவே

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துவதற்கும், பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கமாக அமைதல் வேண்டுமென அரசியல் அமைப்புக்கான 11 வது திருத்தத்தின் 103(2) உறுப்புரை கூறுகிறது.**

**ஆனால் இன்றுவரை கிரமமான முறையில் தேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. எனவே தேர்தல் ஆணைக்குழுவிற்குப் பதிலாக மேற்படி அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் பயன்படுத்தி வருகிறார்.**

அரசியல் அமைப்பிற்கான 17 வது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு ஒன்று தாபிக்கப்பட்டது. இவ் ஆணைக்குழுவின் தவிசாளர் அரசியல் அமைப்புப் பேரவையினால் பரிந்துரைக்கப்படுவதன் மூலம் இப் பதவியின் பக்க சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்துவது குறிக்கோளாக அமைந்தது.

உறுப்புரையின் 104ஆ(2) இல் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் தேர்தலை அல்லது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்களை நடாத்துதல் அல்லது எடுத்தல் தொடர்பான எல்லாச் சட்டங்களையும் வழுவாக்குவதனை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சட்டங்களை வழுவாக்கம் செய்யும் பொறுப்பிக்கப்பட்ட எல்லா அரச அதிகாரிகளும் அத்தகைய வலுவாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்பது அவர்களது கடமையாதலும் வேண்டும்.

அரசியல் அமைப்பிற்கு ஏற்ப எந்தவொரு தேர்தலின்போதும் பொதுச் சொத்துக்கள், ஆதனங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. மேற்படி ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தல் ஆணையாளர் 2010 ஜனாதிபதிச் செயலாளர் உட்பட அரசசேவையின் உயர்பதவி வகிக்கும் செயலாளர்களுக்கு வழங்கிய கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

மேற்படி உறுப்புரையின் 4(ஆ) பிரிவிற்கு

அமைய தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும் பணிப்புரைக்கு இணங்கி ஒழுகுதல், அத்தகைய ஆதனம் அப்போதைக்கு எந்த ஆளின் அல்லது அலுவலரின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதோ அந்த ஆள் அல்லது அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும். ஆனால் இன்றுவரை கிரமமான முறையில் தேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. எனவே, தேர்தல் ஆணைக்குழுவிற்குப் பதிலாக மேற்படி அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் பயன்படுத்தி வருகிறார்.

**அரச அலுவலக கட்டடங்கள், அரசுக்கு உரித்தான ஏனைய கட்டடங்கள் மற்றும் உல்லாசப் பயண விடுதிகள் என்பனவும் அரச வளங்கள் ஆகையால், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கும் ஆட்களுக்கு அரசுக்குரித்தான மேற்படி விடுதிகளையோ, கட்டடங்களையோ இலவசமாக வழங்குவது முற்றிலும் தடைசெய்யப்பட்டு உள்ளது.**

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசுக்கு உடமையான ஹெலிகொப்டர் போன்ற விமானங்களைப் பயன்படுத்துவதாக கடந்த தேர்தல்களின்போது தேர்தல் திணைக் களத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, அரச வாகனங்களுக்குப் பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களும் மேற்படி வாகனங்களைக் குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு அல்லது குறிப்பிட்ட வேட்பாளரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படாத முறையில் தேர்தல் கால கட்டங்களின்போது வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு வாகனங்களைப் பராமரிக்கும் அதிகாரி விசேட கவனம் செலுத்த வேண்டும்.

05. அரச அலுவலக கட்டடங்கள், அரசுக்கு உரித்தான ஏனைய கட்டடங்கள் மற்றும் உல்லாசப் பயண விடுதிகள் என்பனவும் அரச வளங்கள் ஆகையால்,

**1981 இன் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் பற்றிய சட்டத்தில் குறிப்பிட்டவாறு, எந்தவொரு வேட்பாளரும், தேர்தல் காலகட்டங்களில் அரச நிதியைச் செலவிட்டு உணவு வழங்கல் அல்லது விருந்தோம்பல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. ஆனால் அலரிமாளிகை, அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான ஆட்களுக்கு விருந்தோம்பலும், உணவும் வழங்கப்பட்டது.**

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கும் ஆட்களுக்கு அரசுக்குரித்தான மேற்படி விடுதிகளையோ, கட்டடங்களையோ இலவசமாக வழங்குவது முற்றிலும் தடைசெய்யப்பட்டு உள்ளது.

அதேசமயம் தேர்தல் இடம்பெறும் காலகட்டத்தில் இடமாற்றங்கள், அரச கூட்டுத்தாபன பதவிகளுக்கான பதவி உயர்வுகள், புதிதாக ஆட்சேர்த்தல், விண்ணப்பங்களைக் கோருதல், நேர் காணலை நடத்துதல் என்பன தவிர்க்கப்பட வேண்டுமென மேற்படி பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1981 இன் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் பற்றிய சட்டத்தில் குறிப்பிட்டவாறு, எந்தவொரு வேட்பாளரும், தேர்தல் காலகட்டங்களில் அரச நிதியைச் செலவிட்டு உணவு வழங்கல் அல்லது விருந்தோம்பல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. ஆனால், அலரிமாளிகை, அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான ஆட்களுக்கு விருந்தோம்பலும், உணவும் வழங்கப்பட்டது. அதேசமயம் ஜனாதிபதிச் செயலாளர் உட்பட அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் தேர்தல் ஆணையாளர் மேற்படி பணிப்புரையை செய்திருந்தாலும் எந்தவொரு அரச அதிகாரிகளும் இக் கட்டளையை மதித்து நடக்கவில்லை.

எனினும், இத்தகைய சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டால் அதற்கு ஏற்புடைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு

இந்தியத் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் அனைத்து தேர்தல்களின்போதும், பொது போக்குவரத்து சேவையின் முக்கிய நிறுவனமான, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பஸ் வண்டிகள் தேர்தல் கூட்டங்களுக்கும், பேரணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் மேற்படி பஸ் வண்டிகள் ஓட வேண்டிய மார்க்கங்களின் பொதுப் பயணிகளான பாடசாலை மாணவர்களும், ஏனைய பயணிகளும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியமை பொது யதார்த்தமாக அமைந்தது. தேர்தல் ஆணையாளருக்கு உள்ள அதிகாரங்களுக்கு அமைய, தேர்தல் சட்டங்களை மீறுவதற்கு எதிராக அவரது பரிந்துரைகள் உரிய முறையில் அமுலாக்கப்படுவதில்லை. இந் நிலைமைகளுக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க முடியாமை இன்று காணப்படும் மிகப் பயங்கரமான நிலைமையாகும். தேர்தல் ஆணையாளர் பக்கச் சார்பின்றி கடமையாற்றுவதன் காரணமாக ஒரு சில அரசியல்வாதிகள் அவரை அரச ஊடகங்களைப் பயன்படுத்தி அப் பதவியைக் குறைத்து மதிப்பீடு செய்து அறிக்கைகளை வெளியிட்ட சந்தர்ப்பங்களும் பல உண்டு.

**தேர்தல் சட்டங்களை மீறுவதற்கு எதிராக அவரது பரிந்துரைகள் உரிய முறையில் அமுலாக்கப் படுவதில்லை. இந் நிலைமைகளுக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க முடியாமை இன்று காணப்படும் மிகப் பயங்கரமான நிலைமையாகும். தேர்தல் ஆணையாளர் பக்கச் சார்பின்றி கடமையாற்றுவதன் காரணமாக ஒரு சில அரசியல்வாதிகள் அவரை அரச ஊடகங்களைப் பயன்படுத்தி அப் பதவியைக் குறைத்து மதிப்பீடு செய்து அறிக்கைகளை வெளியிட்ட சந்தர்ப்பங்களும் பல உண்டு.**

இதனால், வாக்காளர்களின் உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்கு ஸ்தாபிக்கப் பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்புக்கள் பலவீனமடைதலும், சர்வஜன வாக்குரிமை

**அரசின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அனைத்தும் தேர்தல் காலங்களின்போது அரசாங்கத்தின் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக எதிர்கட்சி வேட்பாளர்களை தாக்குவதற்கு பாரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றன. இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விடுக்கும் கட்டளைகள் பொருட்படுத்தப் படுவதில்லை.**

அர்த்தமற்றதாகவும் அமைந்துள்ளது.

வாக்காளர்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் இடையீடு செய்த பல சந்தர்ப்பங்கள் பயனற்றுப் போனவை பற்றி எடுத்துக் காட்டக்கூடிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. அரச ஊடகங்கள் தேர்தல் சட்டங்களை மீறியமை இதற்குச் சிறந்த உதாரணமாகும். அனைத்து தேர்தல்களிலும் தேர்தல் ஆணையாளர் விடுக்கும் பரிந்துரைகளை ஊடகங்கள் பொருட்படுத்தாமையைக் காணக்கூடியதாக உள்ளது. அரசின் லேக் ஹவுஸ் நிறுவனம் அரசாங்கத்தின் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கு மேலதிகமாக, தனிப்பட்ட அச்சகங்களுக்கான கடதாசிகளையும் வழங்கி வருகின்றது.

அதேசமயம் அரசின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அனைத்தும் தேர்தல் காலங்களின்போது அரசாங்கத்தின் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக எதிர்கட்சி வேட்பாளர்களை தாக்குவதற்குப் பாரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றன. இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விடுக்கும் கட்டளைகள் பொருட்படுத்தப்படுவதில்லை.

தேர்தல் சட்டங்களை ஊடகங்கள் மீறுவதைத் தடுப்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியை தேர்தல் ஆணையாளர் நியமிக்கும்போது, மேற்படி தகுதிவாய்ந்த அதிகாரியின் பரிந்துரைகள் பொருட்படுத்தப் படுவதில்லை. அரச தாபனக்

கோவையின் xxxii ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படுவதைப் போல, அரச ஊழியர்கள் வாக்களிக்க முடியுமே ஒழிய தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. தேர்தல் திணைக்களத்தின் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் பின்வருமாறு:

- பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள்
- நீதித்துறை அதிகாரிகள்
- அரசசேவை அதிகாரிகள்
- சிறைச்சாலை அதிகாரிகள்
- பொலீசாரின் கடமைகளைப் புரிவதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள்

**தேர்தல் திணைக்களத்தின் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் பின்வருமாறு:**

**பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள்**

**நீதித்துறை அதிகாரிகள்**

**அரசசேவை அதிகாரிகள்**

**சிறைச்சாலை அதிகாரிகள்**

**பொலீசாரின் கடமைகளைப் புரிவதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள்**

அதேசமயம் இத் துறைகளைச் சார்ந்த சகல அரச ஊழியர்களும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணலாம்.

இத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பது அல்லது சட்டங்களை மீறுவோர் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு, தேர்தல் ஆணையாளருக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கும் தேவை உண்டு.

## அரசியல் கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகம்

ஒரு குறிப்பிட்ட நாட்டில் ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின் அரசியல் கட்சிகள் பங்களிப்புச் செய்ய வேண்டியது அடிப்படைக் கடமையாகும். செயற்பாடு கொண்ட சிவில் பிரஜைகளின் கூட்டு முயற்சியே அரசியல் கட்சியாகும்.

**ஒரு குறிப்பிட்ட நாட்டில் ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின் அரசியல் கட்சிகள் பங்களிப்புச் செய்ய வேண்டியது அடிப்படைக் கடமையாகும். செயற்பாடு கொண்ட சிவில் பிரஜைகளின் கூட்டு முயற்சியே அரசியல் கட்சியாகும்.**

ஒரு கட்சியில் உட்கட்சி ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே ஒரு நாட்டின் ஜனநாயகம் நீடித்து நிலைக்கும்.

### அரசியல் கட்சியின் பொறுப்புக்கள்

01. பிரஜைகளை அரசியல் ரீதியில் அறிவூட்டுதல்

02. அரசியல், பொருளாதார மற்றும் கலாசார பிரச்சினைகள் பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்கான செயல் மார்க்கங்கள் பற்றியும் சமூகத்தில் ஓர் கலந்துரையாடலை ஊக்குவித்தல்

03. கட்சி உறுப்பினர்களின் ஆற்றலையும் தலைமைத்துவப் பண்புகளையும் அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கு உதவி ஒத்தாசை வழங்குதல்.

04. கட்சி உறுப்பினர்களின் உயிரோட்டமுள்ள பங்களிப்பை முன்னெடுத்துச் செல்லுதல்.

05. குறிப்பிட்ட கட்சி அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாயின் கட்சிக்குள்ளும். நாட்டிலும் தனிநபர்களுக்கு சமத்துவமான நீதியான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

ஒரு அரசியல் கட்சியின் யாப்பை உருவாக்கும்போது, வெறுமனே தலைவரின் அல்லது ஒருசில முக்கியஸ்தர்களின்

கருத்துக்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கக் கூடாது.

கீழ் மட்டங்களில் இருந்து மேல் மட்டங்கள் வரை, அதாவது பிரஜைகளின் அபிலாசைகளைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் வெற்றிகரமான யாப்பை உருவாக்குதல்.

அத்தோடு கட்சியின் நிதி விபரங்கள் இரகசியமானதாக இருக்கக் கூடாது. வருடாவருடம் கட்சியின் வருமானமும் செலவினமும் கட்சியின் உறுப்பினர்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பிட்ட கால எல்லையுள் கட்சியின் பொதுக் கூட்டம் அல்லது மாநாடு நடத்தப்பட வேண்டும். தேர்தல் தொகுதிகளின் அமைப்பாளர்களை நியமித்தல், மாவட்ட மாநாடுகளின்போது கட்சி உறுப்பினர்களின் வாக்குகள்மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும. கட்சி உறுப்பினர்களின் வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பெரும்பான்மை விருப்பத்திற்கு அமையவே கட்சித் தலைமை தீர்மானிக்கப்பட வேண்டும். கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவை வலுப்பெறச் செய்ய வேண்டும். அரசியல் கட்சிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மூலமே கட்டுப்படுத்தலாம்.

சில அரசியல் கட்சிகள் ஒருபோதுமே தமது குறிக்கோள்கள் பற்றிய வரவு செலவுத் திட்டங்களை சமர்ப்பிக்க மாட்டார்கள்.

**தேர்தல் தொகுதிகளின் அமைப்பாளர்களை நியமித்தல், மாவட்ட மாநாடுகளின்போது கட்சி உறுப்பினர்களின் வாக்குகள்மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும. கட்சி உறுப்பினர்களின் வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பெரும்பான்மை விருப்பத்திற்கு அமையவே கட்சித் தலைமை தீர்மானிக்கப்பட வேண்டும்.**

**சில அரசியல் கட்சிகளின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தலைமைக் குழு உறுப்பினர்கள், கட்சியின் அதிஉயர் பீடம் என்பன கட்சித் தலைவர்களின் தற்றுணிபுக்கு அமைய நியமிக்கப்படுகின்றன. மேற்படி குழுக்களின் உதவி மூலம் தொடர்ந்தும் தலைமைத்துவத்தில் தேங்கி இருக்கும் மரபு இலங்கையில் நிலவுகிறது. அதேசமயம் கட்சியின் யாப்பை பொருட்படுத்தாது செயற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.**

கட்சிகளின் நிதி நடவடிக்கைகளை கணக்காய்வு செய்யும் அதிகாரமும், கட்சிகளைத் தடைசெய்யும் அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவிற்கோ அல்லது தேர்தல் ஆணையாளருக்கோ வழங்கப்பட வேண்டும்.

கட்சித் தலைமையைத் தேர்ந்தெடுத்தல், கட்சி நடவடிக்கைகளை நிச்சயித்தல் என்பன கட்சி யாப்பில் குறிப்பிடப்பட வேண்டும். தற்போது இலங்கையில் சில அரசியல் கட்சிகளின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தலைமைக் குழு உறுப்பினர்கள், கட்சியின் அதிஉயர் பீடம் என்பன கட்சித் தலைவர்களின் தற்றுணிபுக்கு அமைய நியமிக்கப்படுகின்றன. மேற்படி குழுக்களின் உதவி மூலம் தொடர்ந்தும் தலைமைத்துவத்தில் தேங்கி இருக்கும் மரபு இலங்கையில் நிலவுகிறது. அதேசமயம் கட்சியின் யாப்பை பொருட்படுத்தாது செயற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இது மிகவும் மோசமான நிலைமையாகும். அனேகமான அபிவிருத்தியடைந்த மேலைத்தேய ஜனநாயக நாடுகளில் உட்கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் வகையிலேயே ஜனநாயகக் கட்சிகள் செயற்படுகின்றன. 1980 களில் இந்திய காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவியாகவும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்குரிய தலைவியாகவும் திருமதி இந்திராகாந்தி அம்மையார் திகழ்ந்தார்.

அவருடைய பெயர் தலைமைப் பதவிக்கு முன்மொழியப்பட்ட போது, வேறு பெயர்கள்

தலைமைப் பதவிக்கு மும்மொழிவதற்கு உண்டா என அந் நிகழ்வுக்கு தலைமை வகித்த தலைவர் வினவினார். ஆனால் வேறு பெயர்கள் மும்மொழியப்படவில்லை. ஒருமுறை அவுஸ்திரேலியாவின் பிரதமர் அதிகாரத்தில் இருந்தபோதே அவரைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு அவர் சார்ந்த அரசியல் கட்சி நடவடிக்கை எடுத்தது.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சி, எதிர் கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதற்கு சதித் திட்டங்களை மேற்கொள்வது வளர்ச்சியடையாத அரசியல் கலாசாரம் நிலவும் நாடுகளில் காணக்கூடிய ஒரு நிகழ்வாகும்.

**ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சி, எதிர் கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதற்கு சதித் திட்டங்களை மேற்கொள்வது வளர்ச்சியடையாத அரசியல் கலாசாரம் நிலவும் நாடுகளில் காணக்கூடிய ஒரு நிகழ்வாகும்.**

எதிர்கட்சியில் உள்ள மக்கள் சபை உறுப்பினர்கள் விலை கொடுத்து அல்லது வேறு வளங்களைக் கொடுத்து வாங்கப் படுகின்றனர். தமக்கு சவால் விடுக்கக் கூடிய எதிர்கட்சித் தலைவர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவர்களுக்கு எதிராக சேறு அள்ளி வீசப்படுகிறது. அல்லது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனினும் பலம்வாய்ந்த எதிர்க்கட்சி ஜனநாயக நல்லாட்சிக்கு முக்கிய காரணியாக அமையும். எதிர்கட்சியின் அரசியல்வாதிகளை சட்டவரம்பிற்குள் அரசாங்கக் கட்சி சிக்க வைக்கும் சந்தர்ப்பங்கள் இலங்கையில் நிலவுகிறது. இரண்டு கட்சிகளையும் சார்ந்த அரசியல்வாதிகள் மோசடிகளிலும், ஊழல்களிலும் ஈடுபடுவதே இதற்கு முக்கிய

**எதிர்க் கட்சியில் இருந்து அரசாங்கக் கட்சிக்கு கட்சி தாவும் அரசியல்வாதிகளில் கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழிக்க முடியாதவாறு தவறான ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்குவதன்மூலம், இலங்கையின் ஆட்சி அதிகாரம் புரிவோர் தமக்குச் சாதகமாக சட்டத்தை வியாக்கியானம் செய்துள்ளனர். இதன் மூலம் வாக்காளர்கள் அவமதிக்கப் பட்டுள்ளனர்.**

காரணியாகும். எதிர்கட்சி உறுப்பினரை அரசாங்கக் கட்சியில் இணைத்துக்கொள்ளும் தந்திரோபாயமாகவும் சட்டத்தின் வரம்பிற்குள் எதிர்கட்சி உறுப்பினரை சிக்க வைப்பது இன்று இலங்கையில் பிரபலமாகக் காணக்கூடிய தொன்றாகும். இந்த சீரழிவுமிக்க அரசியல் மரபை இலங்கையில் காணக்கூடியதாக உள்ளது. அரசாங்கக் கட்சியைத் தொடர்ந்து பதவியில் வைத்திருப்பதற்கு வகைதொகையின்றி செலவு செய்ய ஒரு குறிப்பிட்ட உறுப்பினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அதேசமயம் மேற்படி உறுப்பினர் ஊழல்கள் மூலமும், மோசடிகள் மூலமும் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் சுதந்திரம் வழங்கப்படுகிறது.

இலங்கையில் போதை வஸ்துக்கள் குறிப்பாக (தூள் வியாபாரம்) “எத்தனோல்” கள்ள வியாபாரம் போன்ற சட்டவிரோதமான பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு அரசியல்வாதிகளுக்கு பரந்துபட்ட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கக் கட்சிக்கு கட்சி தாவும் அரசியல்வாதிகளின் கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழிக்க முடியாதவாறு தவறான ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்குவதன்மூலம், இலங்கையின் ஆட்சி அதிகாரம் புரிவோர் தமக்குச் சாதகமாக சட்டத்தை வியாக்கியானம் செய்துள்ளனர். இதன்மூலம் வாக்காளர்கள் அவமதிக்கப்பட்டுள்ளனர்.

## நுகர்வோர் சேவைகளுக்கான அதிகார சபை

1979 இன் 01 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1987 இன் 01 ஆம் இலக்க நியாயமான வியாபார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1950 இன் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (173 ஆவது அத்தியாயம்) என்பவற்றை இல்லாதொழித்து 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தின்கீழ் நுகர்வோரின் நடவடிக்கைகளுக்கான அதிகாரசபை நிறுவப்பட்டது.

கைத்தொழிற் சட்டம், பொருளாதாரம், வர்த்தகம், நிருவாகம், கணக்கீடு, விஞ்ஞானம் அல்லது சுகாதாரம் போன்ற துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அனுபவம் வாய்ந்த 10 உறுப்பினர்களுக்குக் குறையாதோர் உள்ளடங்கிய அதிகார சபையே நுகர்வோர் அதிகார சபையாகும். இச் சபையின் தவிசாளராக ஒருவர் நியமிக்கப்படுவார்.

**கைத்தொழிற் சட்டம், பொருளாதாரம், வர்த்தகம், நிருவாகம், கணக்கீடு, விஞ்ஞானம் அல்லது சுகாதாரம் போன்ற துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய அனுபவம் வாய்ந்த 10 உறுப்பினர்களுக்குக் குறையாதோர் உள்ளடங்கிய அதிகாரசபையே நுகர்வோர் அதிகார சபையாகும். இச் சபையின் தவிசாளராக ஒருவர் நியமிக்கப்படுவார்.**

**உரிய நியமங்களற்ற பண்டங்கள் சந்தையில் அதிகரிப்பதன் காரணமாக நுகர்வோர் பாதிக்கப்படும் ஒரு சுலபமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.**

## நுகர்வோர் அதிகாரசபையின் குறிக்கோள்கள்

வியாபாரத்தை ஓர் ஒழுங்கு முறையின் கீழ் நடத்துவதன் மூலம்:

1. திருப்திகரமான நுகர்வோரை உருவாக்குதல்
2. நியாயமற்ற வியாபார நடைமுறைகளின் போது நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குதல்
3. கல்வி மற்றும் அறிவூட்டல் மூலம் நுகர்வோரை வலுவூட்டுதல்
4. போட்டி விரோத நடத்தைகளுக்கு எதிராக வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோரைப் பேணிப்பாதுகாத்து சிறந்த போட்டிகரத் தன்மையை மேம்படுத்தல்
5. அதிகார சபையின் நடவடிக்கைகளை விரிவாக்குவதன்மூலம் நிறுவன ரீதியான அபிவிருத்தியை அடைதல்

உரிய நியமங்களற்ற பண்டங்கள் சந்தையில் அதிகரிப்பதன் காரணமாக நுகர்வோர் பாதிக்கப்படும் ஒரு சுலபமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந் நிலைமையைத் தடுப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்பு பிரிவு விரிவாக்கப்படாததன் காரணமாக நாடுபரந்த ரீதியில் ஒரு பிரதிநிதித்துவத்தை வழங்க முடியவில்லை.

## இலங்கையின் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு

இலங்கையின் பல்வகை துறைகளைக் கண்காணிக்கும் நிறுவனமாக பல்வகைமை உட்கட்டமைப்பு கைத்தொழில்களைக் கண்காணிப்பதற்காக இவ் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டத்தின்மூலம் மின்வலு மற்றும் சக்திச் சேவைகள் அடங்கிய கைத்தொழில்களைக் கண்காணிப்பதற்கு இதன்மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2006 இன் எரிபொருள் கைத்தொழிலும் இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு மூலம் கண்காணிக்கப்பட வேண்டிய கைத்தொழில்களின் பட்டியலில் இதுவும் சேர்க்கப்பட்டது.


மின்வலு கைத்தொழிலில் பயன் உள்ள முதலீட்டை வினைத்திறனுடன் திட்டமிடுவதற்கும் பண்பு ரீதியாக சிறந்த சேவையை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடனும் இலங்கை பொதுமக்கள்

Public Utilities Commission Of Sri Lanka

**2002 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டத்தின்மூலம் மின்வலு மற்றும் சக்திச் சேவைகள் அடங்கிய கைத்தொழில்களைக் கண்காணிப்பதற்கு இதன்மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

பயன்பாட்டு ஆணைக்குழு மின்வலு உற்பத்தி, மின்வலு விநியோகம் போன்ற வசதிகள், பயன்பாடு என்பன கண்காணிக்கப்படும்.

அதன் முதலாவது ஆணையாளர் குழுமமும், பணிப்பாளர் நாயகத்தின் நியமனமும், 2003 ஆம் ஆண்டில் இருந்து ஒரு நிறுவனமாகத் தனது பணிகளை ஆரம்பித்தது.



# தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

தொழிலாளர்களுக்கான நஷ்ட ஈடுகளைக் கோருதல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், அங்கீகரிக்கப்பட்ட நஷ்ட ஈட்டு கோரிக்கைகள் பற்றிய விசாரணைகளை நடத்தி, மேற்படி கோரிக்கைகளை வழங்குவதன் மூலம் அல்லது புறக்கணித்தல் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், ஊழியர்களின் நஷ்டஈட்டுப் பணத்தைச் சேகரித்தல், வலது குறைந்த அல்லது வைத்தியசாலைகளில் துன்பப்படும் ஊழியர்கள் அல்லது இறந்த ஊழியர்கள் மூலம் பராபரிக்கப்படுபவர்களுக்கு மேற்படி நஷ்டஈட்டுப் பணத்தை வழங்குதல் அமைச்சின் கருமங்களாகும்.

கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்புடைய விசாரணைகள், திடீர் விபத்து ஏற்பட்ட பிரதேசத்திலேயே நடத்தப்பட வேண்டும். இதற்கென இலங்கையின் அனேகமான பிரதேசங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் அமுலில் இருக்கும். பாரதூரமான திடீர் விபத்துக்களின்போது, தொழிலாளர் நஷ்ட ஈட்டு ஆணையாளர் நஷ்ட ஈட்டுப் பணம் வழங்கப்படுவதை அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால், உயிர் அபாயம் அற்ற விபத்துக்களுக்கு ஏற்புடைய நஷ்டஈட்டுத்

**தொழிலாளர் களுக்கான நஷ்ட ஈடுகளைக் கோருதல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், அங்கீகரிக்கப்பட்ட நஷ்ட ஈட்டு கோரிக்கைகள் பற்றிய விசாரணைகளை நடத்தி, மேற்படி கோரிக்கைகளை வழங்குவதன் மூலம் அல்லது புறக்கணித்தல் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், ஊழியர்களின் நஷ்டஈட்டுப் பணத்தைச் சேகரித்தல், வலது குறைந்த அல்லது வைத்தியசாலைகளில் துன்பப்படும் ஊழியர்கள் அல்லது இறந்த ஊழியர்கள் மூலம் பராபரிக்கப் படுபவர்களுக்கு மேற்படி நஷ்டஈட்டுப் பணத்தை வழங்குதல் அமைச்சின் கருமங்களாகும்.**

**குறிப்பிட்ட வயதெல்லையை அடையாத ஒரு பிள்ளையின் கல்வி, பராமரிப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைக்கான மேற்படி பிள்ளைக்கு நிதி உதவி தேவையென சான்றாதாரங்கள் உள்ள போது பாலிய வயதுடைய பராமரிக்கப் படுவோரின் பெயருக்கு வங்கிக் கணக்கில் உள்ள பணத்திற்கு கிடைக்கும் வட்டி, தொழிலாளர் நஷ்டஈட்டு ஆணையாளரின் தற்றுணிபின் பிரகாரம் மேற்படி பிள்ளையின் பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.**

தொகை தொழிலாளர் நஷ்டஈடுகள் ஆணையாளரின் அங்கீகாரத்தோடு வலது குறைந்த ஊழியர்களுக்கு அல்லது நோய் வாய்ப்பட்ட ஊழியர்களுக்கு நேரடியாகச் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறாக பணம் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில், தொழில்தருநர் - ஊழியர்கள் ஆகிய இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் பணம் செலுத்தப்பட்டது பற்றிய பிரகடனத்துடன் ஓர் பத்திரத்தைக் கையொப்பமிட்டு தொழிலாளர் நஷ்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறந்த ஊழியர்களின் பாலிய வயது பராமரிக்கப்படுவோரின் நன்மைக்காக அவர்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை தொழிலாளர் ஆணையாளரின் பொறுப்புடமையின்கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில் இடப்பட வேண்டும். அவர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்யும்போது மேற்படி சேமிப்பு கணக்குப் புத்தகம் அவர்களுக்கு கையளிக்கப்படும். குறிப்பிட்ட வயதெல்லையை அடையாத ஒரு பிள்ளையின் கல்வி, பராமரிப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைக்கான மேற்படி பிள்ளைக்கு நிதி உதவி தேவையென சான்றாதாரங்கள் உள்ள போது பாலிய வயதுடைய பராமரிக்கப்படுவோரின் பெயருக்கு வங்கிக் கணக்கில் உள்ள பணத்திற்கு கிடைக்கும் வட்டி, தொழிலாளர் நஷ்டஈட்டு ஆணையாளரின் தற்றுணிபின் பிரகாரம் மேற்படி பிள்ளையின் பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

# இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்திற்கான கருமபீடம்

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டம், 1994 இன் 04 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்ட சட்டம், மற்றும் 2009 இன் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்கீழ், இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவை கரும பீடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களினதும், அவர்களின் குடும்பங்களினதும் முன்னேற்றமும் நலன் புரியும் கருதி செயற்படுவது குறித்து அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வது மேற்படி கருமபீடத்தின் கடமைப் பொறுப்பாகும்.

**2009 இன் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்கீழ், இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவை கரும பீடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர் களினதும், அவர்களின் குடும்பங்களினதும் முன்னேற்றமும் நலன் புரியும் கருதி செயற்படுவது குறித்து அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வது மேற்படி கருமபீடத்தின் கடமைப் பொறுப்பாகும்.**

ஆரம்பத்தில் இந் நிறுவனம் தொழில் அமைச்சின்கீழ் செயற்பட்டது. 2007 இல் இது வெளிநாட்டு தொழில் வாய்ப்பை மேம்படுத்தும் நலன்புரி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது. வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்கலும், அமுலாக்கலும் பிரசார நடவடிக்கைகளை செயற்படுத்தலும் போன்ற கருமங்கள் இக்கருமபீடத்தின் மூலம் அமுலாக்கப்பட்டது. பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக 07 பிராந்திய அலுவலகங்கள்மூலம் சேவை வழங்கப்படுகிறது.

**வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை உழைப்பாளர்களுக்கு வழங்கும் உடன்படிக்கைகளுக்கு நியமங்களை விதித்தல், அவற்றிற்கான அங்கீகாரத்தை வழங்குதல் அல்லது புறக்கணித்தல் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர் களினதும், அவர்களின் குடும்பங்களின் மேம்பாடு மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன் மூலம் செயற் படுத்தப்படுகிறது.**

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை உழைப்பாளர்களுக்கு வழங்கும் உடன் படிக்கைகளுக்கு நியமங்களை விதித்தல், அவற்றிற்கான அங்கீகாரத்தை வழங்குதல் அல்லது புறக்கணித்தல் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களினதும், அவர்களின் குடும்பங்களின் மேம்பாடு மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன் மூலம் செயற் படுத்தப்படுகிறது.

தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்கள், வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் இலங்கை தொழில் முகாமையாளர்கள் என்போரின் விரிவான தரவுகளைப் பராமரித்தல், அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்களைத் தயாரித்தல், 29 பயிற்சி நிலையங்கள் ஊடாக வெளிநாடு செல்லுமுன்னர் அங்குள்ள தொழில்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல் இதன்மூலம் மேற்கொள்ளப் படுகின்றன. இலங்கையில் இருந்து தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுடன் உழைப்பாளர்களுக்கு நன்மை ஏற்படக் கூடிய வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்குதல், தொழிலுக்காக வெளிநாடு களுக்குச் செல்லும் இலங்கையர்களைப் பதிவு செய்தல், வெளிநாடுகளுக்குச் செல்லு முன்னர் அறிமுகப்படுத்தும் நிலையங்களைப் பராமரித்தல் என்பன இலங்கை வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கான கருமபீடத்தில்மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நாடிச் செல்லும் இலங்கையர்களின் பெரும்பான்மையினர் கிராமீய அல்லது பகுதி நகர்ப்புற பின்னணியில் இருந்து வரும் பயிற்றப்படாத உழைப்பாளர் படையைச் சேர்ந்தவர்கள். எனவே குறைந்த சம்பளம் பெறுதல், இம்சைகளுக்கு ஆளாகுதல், போதிய அறிவின்மை காரணமாக வெளிநாட்டு தொழில் தருநர்களிடம் மோதல்களை ஏற்படுத்திக்கொள்ளுதல், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களின் அதிகாரிகளின் துன்புறுத்தல்களுக்கு ஆளாதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. உயிரிழப்புக்கள் ஏற்பட்ட சம்பவங்களும் உண்டு.

**குறைந்த சம்பளம் பெறுதல், இம்சைகளுக்கு ஆளாகுதல், போதிய அறிவின்மை காரணமாக வெளிநாட்டு தொழில் தருநர்களிடம் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளுதல், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வெளிநாட்டு தூது வரால யங்களின் அதிகாரிகளின் துன்புறுத்தல்களுக்கு ஆளாதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. உயிரிழப்புக்கள் ஏற்பட்ட சம்பவங்களும் உண்டு.**

இந் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக அண்மையில் வெளிநாட்டுச் சேவைப் பணியகம் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தது. அதற்கமைய தொழில்வாய்ப்பு வழங்கும் முகவர் நிலையங்களின் தன்மையை கண்டறிந்து பிரச்சினைகள் உள்ள நிறுவனங்களுக்கான உத்தரவுப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. பயிற்றப்படாத உழைப் பாளர்களுக்குப் பதிலாக NVQ மட்டத்திலான உழைப்பாளர்களுக்கு முதன்மை இடம் வழங்கப்படுகிறது. அதேசமயம் ஐந்து ஆண்டுகளைவிட குறைந்த வயதுடைய தாய்மார் வெளிநாட்டு தொழில்நாடிச் செல்வதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**அரசகரும மொழிகளை மதிப்பாய்வு செய்தல், அதனை அமுலாக்குவதற்கு ஊக்குவித்தல், தராதரம், சமத்துவம், பயன்பாட்டு உரிமைகளை அங்கீகரித்தல், அவ்வாறு அவற்றைப் பராமரித்தல் என்பன ஆணைக்குழுவின் கடமைகளாகும். அத்தோடு அரசகரும மொழிகள் அடிப்படை உரிமைகளாக அமுலாக்கப் படுவதனையிட்டு வகைப்பொறுப்பு கூறுல், ஆணைக்குழுவினால் அல்லது பிரஜைகளினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் அவற்றிற்கு பரிகாரம் காணுதல் என்பன ஆணைக்குழுவின் பொறுப்புக்களாகும்.**

## அரச கரும மொழிகள் ஆணைக்குழு

2010.11.25 ஆந் திகதிய இலக்கம் 1681/03 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைக்கப்பட்ட தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின்கீழ் செயற்படும் மூன்று பிரதான நிறுவனங்களில் அரசகரும மொழிகள் ஆணைக்குழு ஒன்றாகும். அரசியல் அமைப்பின் vi ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுதல், விசாரணை செய்தல், மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் குறிக்கோள்களாகும். அரசகரும மொழிகளை மதிப்பாய்வு செய்தல், அதனை அமுலாக்குவதற்கு ஊக்குவித்தல், தராதரம், சமத்துவம், பயன்பாட்டு உரிமைகளை அங்கீகரித்தல், அவ்வாறு அவற்றைப் பராமரித்தல் என்பன ஆணைக்குழுவின் கடமைகளாகும். அத்தோடு அரசகரும மொழிகள் அடிப்படை உரிமைகளாக அமுலாக்கப்படுவதனையிட்டு வகைப்பொறுப்பு கூறுல், ஆணைக்குழுவினால் அல்லது பிரஜைகளினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் அவற்றிற்கு பரிகாரம் காணுதல் என்பன ஆணைக்குழுவின் பொறுப்புக்களாகும்.

பிரஜைகளின் மொழி உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளைச் செய்ய முடியும். அதாவது:

(அ) குறிப்பிட்டதொரு அரசகரும மொழியின் உரிய அந்தஸ்து அங்கீகரிக்கப்படாத பட்சத்தில் அல்லது அமுலாக்கப்படாத பட்சத்தில் அல்லது

(ஆ) அரசியல் அமைப்பின் மூலம் குறிப்பிடப் பட்டுள்ள உரிமைகளுக்கேற்ப செயற் படாத போது

(இ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள், ஒழுங்குவிதிகள், முடிவுகள், நிர்வாகக் கட்டளைகளுக்கு அமைய செயற்படவில்லையென தோற்றும்பட்சத்தில்

(ஈ) அரசியல் அமைப்பின் iv ஆம் அத்தியாயத்தின் குறிக்கோள்களுக்கு அமைய செயற்படாதபோது

அரச கரும மொழிகள் ஆணைக்குழு விசாரணை செய்தல் வேண்டும். நியாயமான காரணங்களின் அடிப்படையில் முறைப்பாடுகளைப் புறக்கணிக்கலாம். அதே சமயம் அவ்வாறு புறக்கணிப்பதற்கான காரணங்களை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**அரச கரும மொழிகள் ஆணைக்குழு விசாரணை செய்தல் வேண்டும். நியாயமான காரணங்களின் அடிப்படையில் முறைப்பாடுகளைப் புறக்கணிக்கலாம். அதே சமயம் அவ்வாறு புறக்கணிப்பதற்கான காரணங்களை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.**

**விசாரணை மேற்கொள்ளும் போது தனக்கு செவிமடுக்க வேண்டும் என்ற உரிமை முறைப்பாட்டாளருக்கு உண்டு.**

14 நாட்களுக்குள் ஓர் நடவடிக்கை அல்லது செயற்பாட்டை மேற்கொள்ளாமல் இருப்பின் உரிமை மீறல் காரணமாக பாதிக்கப்பட்ட ஓர் நபருக்கு அல்லது குழுமத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும்.

முறைப்பாட்டாளருக்கு அவசியமாயின் அவருடைய அந்தரங்கத் தன்மையைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய வகையில் விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

21, 22 ஆகிய வாசகங்களில் ஆணைக் குழுவின் அதிகாரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.(அ) சாட்சியாளர்களை அழைத்தல் மற்றும் குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுதல்.

(ஆ) சத்தியப்பிரமாணத்தின் மீது சாட்சி கூறுதல்.

(இ) ஒரு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சாட்சியைக் கவனத்தில் கொள்ளாது தகவல்களைப் பெறுவதற்கும், கவனத்திற் கொள்வதற்கும் முடியும்.

(ஈ) தகுதியான ஓர் இடத்தில் விசாரணையை மேற்கொள்ளலாம்.

22 (1) வாசகத்தின்படி விசாரணை மேற்கொள்ளும்போது தனக்கு செவிமடுக்க வேண்டும் என்ற உரிமை முறைப்பாட்டாளருக்கு உண்டு.

22 (2) ஆளொருவர் அல்லது நிறுவனம் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பரிந்துரையைச்

செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில் அந் நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு பதிற்குறி காட்டுவதற்கு சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும்.

23 (1) விசாரணையின் பின்னர்

**விசாரணை மேற்கொண்ட நடவடிக்கை அல்லது விசாரணை செய்யாமை பற்றி கவனிப்பதற்கும், செயற்படுவதற்கும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும்.**

(அ) விசாரணை மேற்கொண்ட நடவடிக்கை அல்லது விசாரணை செய்யாமை பற்றி கவனிப்பதற்கும், செயற்படுவதற்கும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) ஒரு குறிப்பிட்ட கட்டளையை மீளக் கவனிக்க வேண்டும், ஒரு குறிப்பிட்ட பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் அல்லது வேறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அதற்கான காரணங்களுடன் நிறுவனத் தலைவருக்கு அறிக்கையிட வேண்டும்.

23 (3) ஒரு முறைப்பாடு சம்பந்தமாக 60 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெளிவாரியான காரணிகளினால் தாமதமேற்பட்டால் மேற்படி காரணங்களுடன் இடைக்கால அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) எத்தகைய காரணிகள் இருப்பினும் முறைப்பாட்டைச் சமர்ப்பித்து 120 நாட்களுக்குள் இறுதி அறிக்கையை முறைப்பாட்டாளருக்கான ஒரு பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**மொழி உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு தாபிக்கப்பட்ட ஏற்பாடுகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்தாலும் பிரஜைகளின் தரப்பில் மேற்படி உரிமைகள் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் உண்டு.**

(5) அறிக்கையுடன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். அவற்றை அமுலாக்கும் முறைபற்றி அரச நிறுவனம் ஆணைக்குழுவிடம் அறிவித்தல் வேண்டுமென ஒரு கட்டளையை விடுக்கலாம்.

மொழி உரிமை உருவாதல் தொடர்பான அரசியல் அமைப்பின் உறுப்புரை 24(1) அமைய உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான ஓர் மனுவை சமர்ப்பிக்க முடியும்.

அரசியல் அமைப்பின் உறுப்புரை 25 (1) அமைய அரச கரும மொழிகள் ஆணையாளரே மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.

அரசியல் அமைப்பின் உறுப்புரை 29 (9) அமைய அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின்படி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யாமல் நேரடியாகவே நீதவான் நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ வழக்குத் தொடர முடியும்.

மொழி உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு தாபிக்கப்பட்ட ஏற்பாடுகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்தாலும் பிரஜைகளின் தரப்பில் மேற்படி உரிமைகள் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் உண்டு.

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகளைச் சமர்ப்பித்த

ஒரு நபர் என்ற வகையில் அனேகமான முறைப்பாடுகள் மந்தகதியிலேயே விசாரணை செய்யப்படுகின்றன. இது எனது சொந்த அனுபவமாகும். முறைப்பாடு செய்து 120 நாட்கள் கடந்த ஏராளமான முறைப்பாடுகள் எதுவிதமான பதிலுமின்றி ஆணைக்குழுவில் தேங்கிக் கிடக்கின்றன.

உதாரணமாக மும்மொழிகளில் அல்லது இரு மொழிகளில் அச்சிடப்படாத பல அறிவித்தல் பலகைகள் இலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றன. அதேசமயம் சில அரச நிறுவனங்களில் உத்தியோகபூர்வமான அறிவித்தல்கள் தொடர்ந்தும் சிங்கள மொழியில் அல்லது ஆங்கில மொழியில் மாத்திரமே இடம்பெறுகின்றன.

அரச அதிகாரிகளின் சில கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் சிங்கள மொழியில் அல்லது ஆங்கில மொழியில் மாத்திரமே இடம்பெறுகின்றன.

2013 ஆம் ஆண்டிற்கான மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாம் அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் சகல ஆவணங்களும். அறிக்கைகளும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் திரு.யோகேஸ்வரன் பிரகடனப்படுத்தினார். ஹற்றன் வலயக் கல்வி அலுவலகத்தின் கடிதங்களும் ஆவணங்களும் சிங்கள மொழியில் மாத்திரம்

இருப்பதன் காரணமாக தமிழ்மொழி மாத்திரம் அறிந்த ஆசிரியர்கள் பல கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் அண்மையில் எடுத்துக் கூறியது.

இலங்கை ம்த்திய வங்கியின் மூலம் வெளியிடப்படும் பணநோட்டுக்களில் அச்சிடப்பட்டுள்ள முக்கிய சிங்கள வாசகங்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் இல்லையென கா.பொ.த.(உயர் தர) மாணவர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார். 1985 ஆம் ஆண்டின் பின்பு அச்சிடப்பட்ட தாபனக்கோவையும் அதன் புதிய திருத்தங்களும் சிங்கள மொழியில் மாத்திரமே அச்சிடப்பட்டு உள்ளன.

ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டைகள் தொடர்பாக இதுவரை சிங்கள மொழியில் மாத்திரம் அதன் உள்ளடக்கங்கள் எழுதப்பட்டு இருந்தன. எமது வழிகாட்டலின்கீழ் தொடரப்பட்ட உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளுக்கு அமைய 201401.01 முதல் இரு மொழிகளில் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்துவரும் ஆண்டின் பின் சகல அடையாள அட்டைகளும் மும்மொழிகளில் பதிப்பிக்க வேண்டுமென உயர்நீதிமன்றம் ஆணையாளருக்கு கட்டளையிட்டது. இது இலங்கையின் மொழி உரிமைகள்பற்றி பெற்ற ஓர் முக்கியமான வெற்றியாகும்.

**எமது வழிகாட்டலின்கீழ் தொடரப்பட்ட உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளுக்கு அமைய 201401.01 முதல் இரு மொழிகளில் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்துவரும் ஆண்டின் பின் சகல அடையாள அட்டைகளும் மும்மொழிகளில் பதிப்பிக்க வேண்டுமென உயர்நீதிமன்றம் ஆணையாளருக்கு கட்டளையிட்டது. இது இலங்கையின் மொழி உரிமைகள்பற்றி பெற்ற ஓர் முக்கியமான வெற்றியாகும்.**

## இலங்கைப் பிரஜைகள் தமது மனக் குறைகளை சமர்ப்பிக்கக்கூடிய நிறுவனங்கள்

1. அரச சேவைகள் ஆணைக்குழு
   177, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05
   Tel : 011-2136600 , 011-2136650, 011-2136700
   Fax : 011-2369302, 011-2369305

2. நிர்வாகம் பற்றிய மேன் முறையீட்டு நியாயச் சபை
   05, டட்லி சேனாநாயக்க வீதி, கொழும்பு 08.

3. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
   330, யூனியன் வீதி, கொழும்பு -02.
   94 -11-2305326 , +94 -11-2305327, 2347529
   Email : info@pclg.gov.lk

4. **நுகர்வோர் விவகார அதிகார சபை**
   1ஆம் மற்றும் 2ஆம் மாடி, 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02
   Tel: -011-2445897 / 011-2393495 / +94-11-2393577
   Hot Line +94-11-3134446-8
   Fax Nos : +94-11-2399148 / +94-11-2321696
   Email : chairmancaa@sltnet.lk / dgcaa@sltnet.lk
   Website : www.consumeraffairs.gov.lk

5. **அரச கரும மொழிகள் ஆணைக்குழு**
   4ம் மாடி, 'பாஷா மந்திரய,
   341/7, கோட்டை வீதி, ராஜகிரிய
   TP-2864214, Fax-011-2871379

6. **மனித உரிமைகள் ஆணைக்குழு**
165, கிங்ஸி வீதி, பொரளை, கொழும்பு 08
0094112694925, 2685980, 2685981 0094112696470
Email: sechrc@sltnet.lk / Web: www.hrcsl.lk

7. பொது மக்களின் மனுக்கள் குழு
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
0094-11-2777302 0094-11-2777558
Email: shyama_f@parliment.lk

8. இலஞ்ச மற்றும் ஊழல்கள் குற்றச்சாட்டு புலனாய்வு ஆணைக்குழு
36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.
+94-11-2559923, +94-11-2596360
+94-11-2586257-(1954)
Email: ciaboc@eureka.lk / sccy@sltnet.lk

9. ஜனாதிபதி ச்செயலகம்
**கொழும்பு 01**
94112354354

10. நீதிச் சேவைகள் ஆணைக்குழச் செயலகம்
த.பெ. இல. 573, ஹல்ஃப்ஸ் டோர்ப், கொழும்பு 12
+94 11 2433119 / +94 11 2451159
sjsc@sltnet.lk

11. இணக்கச் சபை
421-02, ஸ்ரீ பௌத்தாலோக்க விகாரை,
பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07
0112 693380

12. தொழிலாளர் நஷ்ட ஈட்டு ஆணையாளர்
128, லொரிஸ் வீதி, கொழும்பு 04
Tel :0112 599662, Fax : + 94 011-2432735

13. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
330, தலவத்துகொட வீதி, மாதிவெல,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
Tel: 2778911- 4
Email : ncpa@childprotection.gov.lk
Web : www.childprotection.gov.lk

14. இலங்கை நில அளவைத் திணைக்களம்
150, கிருல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு 05
Tel : +94 112369011 to 14
Fax : 0112369343
Email : sgsurv @ sltnet.lk

15. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
129, மேல் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
புதுக்கடை, கொழும்பு 12
+94-11-5335329 / +94-11-5335281
+94-11-2433618
Email : legalaid@sltnet.lk
www.legalaidcommission.com

16. இலங்கை கட்டளைகள் பணியகம்
17, விக்டோரியா வீதி,
எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8
Tel - 0112671567-72

17. மத்திய சுற்றாடல் அதிகார சபை
நெல்சன் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
Tel: 011-7877277, 7877278, 7877279, 7877280
Hotline: 011-2888999

18. நகர அபிவிருத்தி அதிகார சபை
6ம், 7ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை.
Tel: +94 11 2875916 to +94 11 2875920, +94 11 2873
Fax: 011 2873637 E-mail: infosys@uda.lk
Web: www.uda.lk

19. தொலைத்தொடர்பு ஒருங்கமைப்பு ஆணைக்குழு (TRCSL)
276 எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8
+94 11 2689345 Email: dgtsl@trc.gov.lk
Web: http://www.trc.gov.lk

20. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
241, பார்க் வீதி, (Park Road), கொழும்பு 05
+94 011 2595555 (Hotline), 0777 595 555 (Mobile Hotline),
+94 011-2587372
+94 011 2503969, + 94 011 2503725 (fax)
info@ntc.gov.lk

21. இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு
6ம் மாடி, இலங்கை வங்கி மர்சன்ட் டவர்,
28, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03
(+94 11)2392607/8 (+94 11)2392641
info@pucsl.gov.lk

22. வரி விவகாரங்களுக்கான ஒம்புட்ஸ்மன்
143 ஏ, வஜிர வீதி, கொழும்பு 05
0114 528671, 0112505542

23. இலங்கை நிதி தொடர்பான ஒம்புட்ஸ்மன்
143 ஏ, வஜிர வீதி, கொழும்பு 05
+94 11 259 5625 / +94 11 259 5624
fosril@sltnet.lk
www.financialombudsman.lk

24. இலங்கை காப்புறுதி த் தொடர்பான ஒம்புட்ஸ்மன்
143 ஏ, வஜிர வீதி, கொழும்பு 05
+94 11 452 8671, +94 11 250 5542 +94 11 452 8670
94 11 259 5625
www.insuranceombudsman.lk
info@insuranceombudsman.lk

25. இலங்கைக் காப்புறுதிச் சபை
உலக வர்த்தக மத்திய நிலையம்,
11ஆம் மாடி, கிழக்குத் தூண், கொழும்பு -01
011 2396184 - 9 / 011 2396190
fax-239619 email-chaya@ibsl.gov.lk

26. இலங்கை கணக்காய்வு நியமங்கள் அவதானிப்புச் சபை
3ம் மாடி, பைபிள் இல்லம், 293, காலி வீதி, கொழும்பு 03
94-1-2301210 94-1-2301211
slaasmb@sltnet.lk

27. தொடர்மாடி வீடுகள் முகாமைத்துவ அதிகார சபை
தேசிய வீடமைப்புத் திணைக்களக் கட்டிடம்
சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
முதலாவது மாடி, கொழும்பு -02
+94-11-2447432 , +94-11-2447429 +94-11-2423606
http://www.condominium.lk

28. இலங்கை சிவில் விமானச் சேவை அதிகார சபை
04, ஹுனுபிட்டிய வீதி, கொழும்பு.
94-11-2358800 / 94-11-2304632
94-11-2304644
info@caa.lk
http://www.caa.lk

29. இலங்கையின் சமுத்திரங்கள் மாசடைவதைத்
தடுக்கும் அதிகார சபை
சமுத்திரச் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை
758, 1ம் மாடி, பேஸ்லைன் வீதி,
கொழும்பு -09
0094 11 4896911/(09411 4615960 fax)
09411 4615960(fax)

30. இலங்கையின் சேமிப்புச் சான்றிதழ் மற்றும் நாணயமாற்று
ஆணைக்குழு
லெவல் 28 மற்றும் 29ம் மாடி, உலக வியாபார மத்திய நிலையம்,
ஈஸ்டன் சதுக்கம், கொழும்பு 01
+94 11 2331013 - 6, +94 11 2439144 – 8
+94 11 2439149
mail@sec.gov.lk

31. பத்திரிகைப் பேரவை
155/15, காசல் வீதி, கொழும்பு 08
011-2693271(fax)

32. கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம்
80, காலி வீதி, கொழும்பு -03
+94 112426900 / 2437055/59/60
+94 112 440001 / 2426984
info@sltda.gov.lk

33. தேசிய மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரணங்களுக்கான அதிகார சபை
25, காலி முகத்திடல் டெரெஸ்,
கொழும்பு 03
094 11 2390645 -8 (Gen), 2390653 (Dir)
094 11 2390649
gemautho@sltnet.lk

34. கூட்டுறவு ஊழியர்களுக்கான ஆணைக்குழு
த.பெ. இல. 1528, 100/1/1,
லோஹர் ஆர்யா கடன் மூலதனக் கட்டிடம்,
ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு 02.
+94 11 2396206, +94 11 2396208
cecsec[at]sltnet.lk

35. இலங்கைச் சட்டமா அதிபர்
த.பெ. இல. 502, ஹல்ஃப்ஸ்டோர்ப்,
கொழும்பு - 12
+94 (11) 2147888 DSG(Administration)
+94 11 242 4894 SSC(Administration)
+94 11 243 3964
+94 (11) 243 6421
administration@attorneygeneral.gov.lk
http://www.attorneygeneral.gov.lk

36. கடன் நிவாரணச் சபைத் திணைக்களம்
80, நீதிமன்றம் மாவத்தை,
கொழும்பு 12
011-2334816, 011-2334815, 011- 2334816
debtconciliation@gmail.com

37. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்
234, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
கொஸ்வத்தை, பத்தரமுல்ல.
தலைமைக் காரியாலயம்:
+ 94 112 864101 – 105, +94 112880500
சஹன பியச பிரிவு: +94 112 259953
24 Hour Service: 1989 (Local Calls Only)
+94 11 2879900 – 902, + 94 11 2879903
infor_center@slbfe.lk

38. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
தொகுதி 09 BMICH வளாகம்
பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -07
(+94) 011 2683307, (+94) 0115107721, (+94)0115107722
(+94) 011 2683307, (+94) 01157107723,
Informationinfo@npc.gov.lk ,
Public Complaintscomplaints@npc.gov.lk

39. இலங்கைத் தேர்தல் திணைக்களம்
தேர்தல் செயலகம்
த.பெ. இல. 02, சரண மாவத்தை, ராஜகிரிய
011-2868441, 011-2868442, 011-2868443
011-2868426
election@slt.lk
www.slelections.gov.lk

40. தொழிலாளர் திணைக்களம்,
தொழிலாளர் செயலகம்,
நாராஹென்பிட்டி, கொழும்பு 05
+94-11-2581142 / +94-11-2581143
0094-11-2581145
doldevlop@sltnet.lk

41. கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் நாயகம்
கமத்தொழில் சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம்
43, ஸ்ரீமத் மார்கஸ் ஃபெணேன்டோ மாவத்தை,
கொழும்பு 07
+94112691060, +94112695595
+94771817478 94112693572
commissionerdad@yahoo.com

42. அளவீட்டு அலகுகளும் நியமங்களும் மற்றும் சேவைகள் திணைக்களம்
101, பார்க் வீதி (Park Road)"
கொழும்பு 05
94-1- 2583261 /2597757 / 2587190 /2588914
94-1-2597756
metrolad@sltnet.lk

43. இலங்கை கடன் விவகாரப் பணியகம்
148, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02
+94 112 131313
94 112 338259
info@crib.lk
http://www.crib.l

44. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு
C 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07
0112694251/0112672273
0112693438/698849
ircaadmin@sltnet.lk

45. வனப் பாதுகாப்பு திணைக்களம்
'சம்பத்பாய" 82, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்ல.

46. ஜனாதிபதிப் புலனாய்வுப் பிரிவு
11, ஜாவத்தை வீதி, கொழும்பு -05
0112595622

இலங்கையின் அனைத்து மாகாண சபைகளினதும் பொதுமக்கள் மனுக்குழுக்களுக்கும், இலங்கையின் சகல பிரதேச செயலாளர்களுக்கும் மனக் குறைகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய முடியும்.

## உசாத்துணை நூல்கள்


- ஒம்புட்ஸ்மனின் கடமைகள் - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்
- இலங்கையின் அரசியல் அமைப்பு
- மொழியும் மனித நேயமும் - சட்டத்தரணி திரு.எஸ்.ஜீ.புஞ்சிஹேவா
- அரசகரும மொழிக்கொள்கையும் அதனோடு தொடர்பான சட்டங்களும்
- கற்ற பாடங்களும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள்
- இலங்கைப் பராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள்
- வடமேல் மாகாண தேர்தலும் சமூக சவால்களும் - திம்பிரியாகம பண்டார
- தொன் ரஞ்ஜித் தேசப்பிரிய எதிராக பிரதேச செயலாளர் தொடங்கொட மற்றும் ஏனையோர் வழக்குத் தீர்ப்பு – சமூர்த்தி ஊழியர்கள்
- அனுராத பிரசாத் தனஞ்ஜெய குருகே வழக்குத் தீர்ப்பு (ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் - தேசிய அடையாள அட்டைகள்)
- விமர்சன ரீதியான பகுப்பாய்வு – கலாநிதி என்.எம்.பெரேரா
- நாகரீகத்தின் மனித புதைகுழியை தோண்டுதல் - திம்பிரயாகம பண்டார
- பிரஜைகளின் கையேடு – Transparency International Sri Lanka

ISBN - 978-955-4746-30-5